
வார இதழ்
# தேசியம்
THESIYAM தேஸியம்
www.thesiyamnews.com
மலர் - 02 இதழ் - 24 05.07.2024 - 12.07.2024 வள்ளுவர் ஆண்டு 2054 பக்கங்கள் 12 ஊக்குவிப்பு : ரூ.80.00

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



## அதிகாரப் பகிர்வுடனான தீர்வே சம்பந்தனுக்கான நன்றிக் கடன்!

### பாராளுமன்றில் ரணில் தெரிவிப்பு.

பக்கம் 02



## சர்வதேசத்துடன் உறவாடிய தீரர்!

### இரா.சம்பந்தனின் மறைவுக்கு பலரும் இரங்கல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், இலங்கையின் மூத்த அரசியல் வாதியுமான இரா.சம்பந்தனின் மறைவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

பக்கம் 11



பக்கம் 03

## சிங்கள தேசத்தை அச்சப்படுத்தும் தமிழ் பொது வேட்பாளர்

ஒரே நாளில் குறைந்த விலையில்
இந்தியாவிற்கான வீசா
மேலும் மலேசியா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளுக்கான சுற்றுலா வீசா ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.


ARUN WINGS
TRAVELS & TOURS
AIR TICKETS | VISA SERVICES | ETA VISA | HOLIDAY PACK
TRAVEL INSURANCE | TRAVEL ILTINERARY
ஒரு வருடத்திற்கான விசா | இலகு ஆவணங்கள் | விரைவான சேவை | சகல நாடுகளுக்குமான மிகக்குறைந்த விலையில் விமானப்பயணச்சீட்டு

076 666 8680 | 076 847 2458
143,Temple Road, Jaffna. | E-Mail : arunwingslanka@gmail.com

## ஓரணியில் திரளாக ஒன்றுபடுவதே இரா. சம்பந்தனின் ஆன்மாவிற்கு

நாம் செய்கின்ற உண்மையான அஞ்சலி – ஜனநாயக போராளிகள் கட்சி

பக்கம் 04



பக்கம் 07

### பிரித்தானியாவில் கவனம்பெறும்

## ஈழத் தமிழ் அரசியல்!



பக்கம் 09


## வாய்ப்புக்களைத் தேடி நீங்கள் பயணியுங்கள்

நிச்சயமாக உங்களுடைய திறமைக்கு ஏதோ ஒரு வகையில் வாய்ப்பு கிடைக்கும்

செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், நடிகை, பாடகி

சரத்குமார் லக்சனா

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# இரா.சம்பந்தன் நிரப்பப்படவேண்டிய அரசியல் வெற்றிடம்



தமிழ் மக்களால் தமிழ்த் தேசியப் பெருந்தலைவராகப் பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவு தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் பெரும் வெற்றிடத்தினை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினையானது முனைப்புப் பெற்றதுமுதல் தமிழர்களின் அரசியலில் தன்னை இணைத்துக் கொண்ட இரா.சம்பந்தன் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தமிழ் மக்களது உரிமைக்காக தன் அரசியலை முன்னெடுத்து வந்திருந்தார்.

முள்ளிவாய்காலில் 2009இல் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்களின் அரசியலுக்கான தலைமையற்றிருந்த நிலையில் தாமாகவே அப்பொறுப்பினை கையிலெடுத்துக்கொண்டார் என்றே சொல்ல வேண்டும்.

பல விமர்சனங்களுக்கு மத்தியிலும் ஒருமித்த, பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்களது பிரச்சினைக்கு சமரஷ்டி முறையிலான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக பாடுபட்டார். மாறிமாறிவந்த அரசுத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டிருந்தாலும் அவ் முயற்சியினை தன்னுடைய முதுமையிலும் அவர் கைவிடவில்லை.

வெளிநாட்டு தூதுவர்கள், உலக நாடுகளின் தலைவர்களாலும் மரியாதையுடன் பார்க்கப்பட்டவராக இருந்த சம்பந்தன், சர்வதேச இராஜதந்திர மட்டத்திலும், சிங்களப் பெரும்பான்மை அரசியல் தலைவர்களிடமும் தமிழ் மக்களுடைய விடயங்களை எடுத்தியம்பும் வகையில் தன்னுடைய அரசியலை தொடர்ந்து வந்திருந்தார்.

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொள்வதில் ஜனநாயக வழிமுறையில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்த அவருக்கு தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையின்மைப் பிரச்சினையை சீர்செய்ய முடியாமல்போயிருந்தது.

இறுதி யுத்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் ஒரு பெரும் எதிர்ப்பினை காண்பிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பிருந்தபோதிலும் தமிழ்நாட்டில் அக்காலத்தில் தங்கியிருந்து இறுதிநேர அழிவின்போது கணக்கற்றிருந்தார் என்ற குற்றச்சாட்டு அவருக்கிருக்கிறது.

அதே நேரத்தில், 2009 மே,யுடன் யுத்தம் மௌனித்த பின் சர்வதேச உறவுகள், பூகோள அரசியல் யதார்த்தங்களைக் கருத்திலெடுத்து தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடுவதாக அறிவித்து சமஸ்டி அடிப்படையிலான தீர்வுக்குத் தயார் என பிரகடனப்படுத்திக் கொண்டார். புலிகளின் காலத்தில் மோசமான தமிழ்-முஸ்லீம் உறவுகளை மேம்படுத்தும் வகையில் செயற்பட்டிருந்தார். அதற்கு கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் முதலமைச்சரை நியமித்தமை வெளியில் தெரியும் செயற்பாடாகும். அதனால், தமிழ் மக்கள் மத்தியிலும், தமிழ் அரசியல் களத்திலும் பல விமர்சனங்களைச் சம்பாதித்தார். இருந்தாலும் கல்முனை வடக்கு (தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலக விவகாரம் உள்ளிட்ட விடயங்களில் முஸ்லிம்களிடமிருந்து அவரால் எந்தச் சாதகமான பதிலையும் பெறமுடியாதிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட சிறிது காலத்தில் விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்குச் சார்பாக தனது நிலைப்பாட்டினை முன்னெடுத்தது. இவ் நிலைப்பாட்டுக்கு எதிர் நிலைப்பாடு கொண்டவராக இருந்தபோதிலும் அதனை அனுசரித்து தனது அரசியலைச் செய்துவந்திருந்தார்.

1977இல் நாடாளுமன்ற உறுப்பினராக 6ஆம் திருத்தச் சட்டத்தினை ஏற்காமை மற்றும் ஜூலைக்கலவரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற புறக்கணிப்பு காரணமாக பதவியிழந்து பின்னர், 2001, 2004, 2010, 2015, 2020 நாடாளுமன்றத் தேர்தல்களில் சம்பந்தன் திருகோணமலைத் தொகுதியில் இருந்து தொடர்ச்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டமை மக்களிடமிருந்த ஆதரவினையே காட்டுகிறது. விமர்சனங்கள் இருந்தாலும், 2020 தேர்தலில் சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடாது போயிருந்தால் அப்பிரதிநிதித்துவத்தை இழக்கவேண்டி ஏற்பட்டிருக்கலாம்.

2015இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாகவும் சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அவ் அரசாங்கத்தில் எதிர்க்கட்சியாக இருந்தாலும் அரசாங்கத்தின் நல்லெண்ண முயற்சிகளுக்கு ஆதரவளித்து அரசியலமைப்பு திருத்தத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார். அம் முயற்சி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளால் கைநழுவிப்போனது என்றே சொல்லலாம்.

நாட்டில் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களின் பின்னும் அமையும் ஓவ்வொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கெதிரான முன்னெடுப்புகளை எடுக்கின்ற வேளைகளிலும் அதனை எதிர்கொள்கின்ற கட்சியாக யுத்தத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்பட்டது. அதனை வழிநடத்தியவர் சம்பந்தன் ஆவார். அதே போன்று ஒவ்வொரு தேர்தல்களின் போதும் தீர்வு இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறான வேளைகளில் வெளியிடப்படும் வாக்குறுதிகள் நிறைவேறாமல் போனதும், நிராசையானதும் வரலாறுதான்.

தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமைகுறித்து பல்வேறு விமர்சனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைவரான சம்பந்தனும் எதிர்கொண்டிருந்தாலும், இறுதிநேரத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சியின் ஒற்றுமைக்கும் எதனையும் செய்யமுடியாதவராக ஆகிப்போனார் என்றே சொல்லமுடியும்.

எவ்வாறானாலும், அசாத்தியமான காலங்களிலும் தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்திச் சென்றவர் என்ற வகையில் அவர் விட்டுச் செல்லும் இடைவெளி நிரப்பல் எவ்வாறு சாத்தியமாகும் என்பதும் தமிழ் தேசியப்பிரச்சினைக்கான தீர்வு இனிவருங்காலங்களில் எப்போது கிடைக்கும் என்பதும் கேள்விக்குறியே.

அந்தவகையில், அதனை நிறைவேற்றவேண்டிய காலக்கடமை தமிழ்த் தேசிய அரசியல் தளத்தில் செயலாற்றிவருகின்ற அனைத்து தமிழ்தேசிய அரசியல் கட்சிகளுக்கும் உள்ளது.

**ஆசிரியர்**

## அதிகாரப் பகிர்வுடனான தீர்வே...

மறைந்த பாராளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் எப்பொழுதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகப் பங்காற்றினார். அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பில் அவருக்குத் தனியான நிலைப்பாடு இருந்தது. அதை நிறைவேற்றுவதே அவருக்கான அஞ்சலி என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் பாராளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் இந்த உரையாற்றும்போது, அன்று என்னுடன் பாராளுமன்றத்துக்கு வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை. மிகவும் கடினமான காலகட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவுகூருகிறேன். அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகவே பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற் றும்போது “ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்தபோது, 1948 ஆம் ஆண்டில் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்” என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார்.

அதனைக்காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. எம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை. ஆனால், அதிகாரப்பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப்பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்கான போதுமான பங்கை செய்துள்ளதாக நினைக்கிறேன்.

அதனை நிறைவுசெய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. மேலும் அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்குச் செய்யக் கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும் - என்றார்.

## சர்வதேசத்துடன் களமாடிய தீரர்! முருகேசு சந்திரகுமார் இரங்கல்!!

இனவாதக் கொந்தளிப்பினால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கைத் தீவை மீட்டெடுப்பதற்கு சமாதானமும் நீதியான முறையில் பல்லின சமத்துவமும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திச் செயலாற்றிய மூத்த அரசியல் தலைவர் இரா. சம்பந்தன். அவரின் மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும். இவ்வாறு சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தனின் மறைவு க்கு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இனப்பிரச்சினை க்கு ஐக்கிய இலங்கைக்குள் நீதியான தீர்வொன்றை எட்ட வேண்டும் எனத் தன்னுடைய இறுதி மூச்சுவரையிலும் உறுதியாக இருந்தவர் சம்பந்தன், சமாதானத்திலும் ஐக்கியத் திலும் அமைதித்தீர்விலும் கொண்டிருந்த ஆர்வத்தைக் குறைத்ததில்லை. மாறிவரும் சர்வதேசச் சூழலையும் உள்நாட்டு நிலவரங்களையும் நன்றாக உணர்ந்தறிந்திருந்து அதன் வழியே தமிழ் மக்களுடைய அரசி யலை முன்னெடுக்க முனைந்தவர்.

## விடுதலைப் போராட்டத்துடன் கைகோர்த்த பெருந்தலைவர்!

### சித்தார்த்தன் எம்.பி. இரங்கல்.

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்த சம்பந்தன், தந்தை செல்வா முதல் இன்றைய தலைமுறையினர் வரை கைகோர்த்துப் பயணித்த ஒரு பெருந்தலைவர். -இவ்வாறு புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் அஞ்சலித்துள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், சம்பந்தரின் திறமை மற்றும் பண்பு, பின்வந்த காலங்களில், குறிப்பாக போரின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் குரலாக. தென்னிலங்கைச் சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர் அங்கீகாரம் பெறக் காரணமாயின. அவரது அரசியல் அபிலாஷைகள், கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில், வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு முன்வருவதே அவருக்கான ஆழமான அஞ்சலியாக இருக்க முடியும்.



# சிங்கள தேசத்தை அச்சப்படுத்தும் தமிழ் பொது வேட்பாளர்

"எதிரி எதை ஆதரிக்கிறானோ அதை நீ எதிர்ப்பாயாக, எதிரி எதை எதிர்க்கிறானோ அதை நீ ஆதரிப்பாயாக" என்று ஒரு அரசியல் தத்துவார்த்த கூற்று உண்டு.

இதுதான் அரசியல் ராஜதந்திரத்தின் அகர வரிசை. அதை விடுத்து எதிரி எதை விரும்புகிறானோ அதை நாமே செய்வது என்பது நமது அழிவுக்கு நாமே குழியை வெட்டுவதாகும். இன்று இலங்கை அரசியலில் சிங்கள தேசம் தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதில் கங்கணம் கட்டி நிற்கிறது. இதிலிருந்து பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்க வல்லது என்பதும் அது சிங்கள தேசத்துக்கு தீமை பயக்கக்கக் கூடியதோடு சிங்களதேசத்தை சிக்கலில் சிக்க வைப்பதாக அமையும் என்பதையும் வெளிக்காட்டி நிற்கிறது.

"முடிந்தால் குடும்பியைப் பிடி, முடியாவிட்டால் காலை பிடி" என்றொரு சிங்கள பழமொழி உண்டு. அதை இன்றைய ஜனாதிபதி தேர்தலில் சிங்களத் தலைவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

அதில் முதற்கட்டமாக சிங்கள அரசியல் தலைவர்கள் தாம் தமிழ் பொது வேட்பாளரை ஒரு பொருட்டாக கருதவில்லை என ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் என்பது உறுதியாகி வலுவடைகின்ற நிலையில் வடக்கு நோக்கி சிங்களத் தலைவர்கள் படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். கடந்தகால 8 ஜனாதிபதி தேர்தல்களின் போதும் எந்த ஒரு சிங்கள ஜனாதிபதி வேட்பாளரும் வடபகுதிக்கு வந்து இப்படி நடந்துகொண்டது கிடையாது. ஆனால் இப்போது பொது வேட்பாளர் ஒருவரை தமிழ் மக்கள் நிறுத்தப் போவதாக அறிவித்ததும் சிங்கள தேசத்திலிருந்து ரணில் விக்கிரமசிங்க வடக்கில் ஆறு நாள் முகாமிட்டு தங்கினார். சஜித் பிரேமதாசாவும் அதே போன்று ஏழு நாட்கள் தங்கி நின்றார். அனுராகுமார திசாநாயக்காவும் நான்கு நாட்கள் தங்கி நின்று தமிழ் மக்களிடம் தமக்கு வாக்களிக்கும்படி வேண்டி நிற்கின்றனர்.

சிங்களத் தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வடபகுதிக்கு வந்து முகாமிட்டிருந்து தமிழ் மக்களிடம் வாக்கு கேட்பது என்பது இலங்கை அரசியலில் அதிசயம்தான்! விந்தையிலும் விந்தைதான்!! ஆனாலும் இந்த அதிசயத்தை நிகழ வைத்தது சிங்கள பௌத்த மதங்கொண்ட யானையை தமிழ் பொது வேட்பாளர் என்ற அங்குசம்தான் என்று சொல்ல வேண்டும். தமிழ் மக்கள் கெஞ்சுகின்ற போது சிங்களத் தரப்பு மிஞ்சி நின்றது. இப்போது தமிழ் மக்கள் மிஞ்சி நிற்கின்ற போது சிங்களத் தரப்பு கெஞ்சி நிற்கின்றது. இதனை பார்க்கின்ற போது ""மயிலே மயிலே என்றால் மயில் இறகு போடாது"" என்ற தமிழ் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

தமிழர் நிலத்திற்கு சிங்கள தலைவர்களின் படையெடுப்பு என்பது தமிழர்கள் தமக்குப் பின்னே நிற்கவேண்டும், அவர்கள் தனித்துவமாக நிற்கவும் கூடாது, தனித்துவமாக சிந்திக்கவும் கூடாது என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாக உள்ளனர். அத்தோடு தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டும் நிற்கக் கூடாது, கட்சிகளாக, பிரதேசங்களாக பிளவுபட்டு நிற்கவேண்டும். அவ்வாறு பிளவுபட்டு இருக்கின்ற போதுதான் தமக்குத் தேவையானவர்களை விலைக்கு வாங்கவும், தமக்கு தேவையானவர்களை கோடாலிக் காம்புகளாக பயன்படுத்தவும் முடியும். இதுவே சிங்கள அரசியல் சித்தாந்தமாக எப்போது உள்ளது.

> **தமிழ் மக்கள் கெஞ்சுகின்ற போது சிங்களத் தரப்பு மிஞ்சி நின்றது. இப்போது தமிழ் மக்கள் மிஞ்சி நிற்கின்ற போது சிங்களத் தரப்பு கெஞ்சி நிற்கின்றது. இதனை பார்க்கின்ற போது "மயிலே மயிலே என்றால் மயில் இறகு போடாது" என்ற தமிழ் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.**

**தி. திபாகரன், M.A**

ஆனால் தமிழ் பொது வேட்பாளர் என்பது தமிழ் மக்களையும், கட்சிகளையும் ஐக்கியபடுத்துகிறது. தமிழ் மக்கள் ஒரு குரலாக ஒலிக்க முற்படுகிறார்கள். இதன் மூலம் சிங்கள தேசத்தோடு தமிழ் மக்கள் சேர்ந்து வாழத் தயாரில்லை. அவர்கள் தனித்துவமாகவே வாழ முற்படுகிறார்கள் என்ற செய்தியை சொல்வதன் ஊடாக தமிழர்கள் சர்வதேச அரசியலை நோக்கி வெற்றிகரமாக முன்னோக்கி நகர்ந்து விடுவார்கள் என சிங்கள தேசம் அச்சப்படுகிறது.

இதன் அடுத்து அடுத்த கட்டமாக இப்போது சிங்கள தேசத்தின் ஊடகங்கள் தமிழ் பொது வேட்பாளரை இனவாதத்தோடு சித்தரிக்க தொடங்கி விட்டன. ஆகவே தமிழ் பொது வேட்பாளர் என்பது தமிழ் மக்களின் அரசியலில் மிகச்சரியான முடிவே என்பதையே இது சுட்டி நிற்கிறது.

கொழும்பின் பிரபல ஆங்கில ஊடகமான டெய்லி மிரர் "Ex-LTTE combatants among those seeking common Tamil presidential candidate" – 26 ஜூன் 2024 அன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த செய்திக்கு பின்னே உள்ள அரசியலும், இனவாதமும், தமிழர்கள் மீதான தென்னிலங்கை ஊடகங்களின் வன்மங்களும் தெளிவாக வெளிப்படுகிறது.

"பொது தமிழ் ஜனாதிபதி வேட்பாளரை கோருபவர்களில் முன்னாள் புலிப் போராளிகளால் உருவாக்கப்பட்ட கட்சி, எதிர்வரும் தேர்தலில் தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்தும்." எனச் சொல்கின்றது. இவ்வாறு சொல்வதன் மூலம் சிங்கள தேசத்தில் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை "புலிப் பயங்கரவாதம்" என்ற சாயத்தை பூசி தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டச் செய்வதுதான் அடிப்படை நோக்கமாகும்.

அதாவது ஏற்கனவே சிங்கள தேசத்தில் புலிகள் பற்றிய கட்டமைக்கப்பட்ட கருத்தான "புலிகள் பயங்கரவாதிகள்" என்றும், அவர்கள் ஜனநாயக விரோத சக்திகள் என்றும், சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட கருத்து சிங்கள மக்களின் ஆழ்மனதில் வலுவாக பதியப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் புலிகள் முன்னிற்கிறார்கள் என்றால் சிங்கள மக்கள் மத்தியில் இதற்கான பெரிய எதிர்ப்பு அலை அணி ஒன்றை ஏற்படுத்துவதும், சிங்கள தரப்பில் புலிகளை வெல்லக்கூடிய ராஜதந்திரம் மிக்க ஒருவரை சிங்கள மக்கள் தெரிவு செய்வதற்கான அரசியல் கருத்தியல் சூழலை உருவாக்குவதும்தான் இதனுடைய முதலாவது நோக்கமாக அமைந்திருக்கிறது.

சிங்கள மக்களின் பார்வையில் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்ற போது அதனை புலிகள் எனக் குறிப்பிட்டு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை சிங்கள மக்கள் எதிர்த்து மறுக்கின்ற கருத்துருவாக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கத்தையும் கொண்டது. இதன் மூலம் சிங்கள தேசத்தில் இனவாத பூதத்தை மீண்டும் கிளப்பிவிட தென்னிலங்கை ஊடகங்கள் முற்படுவது வெளிப்படையாக தெரிகிறது.

தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் ஒரு ஜனாதிபதி பொது வேட்பாளரை நிறுத்துவதை கண்டு சிங்களத் தலைவர்கள் மாத்திரம் அச்சப்படவில்லை சிங்கள ஊடகங்களும், சிங்கள கருத்திருவாக்கிகளும், சிங்கள ராஜதந்திரங்களும் அச்சப்படுகிறார்கள் என்பதையே மேற்படி செய்தி வெளிக்காட்டி நிற்கிறது.

கடந்த 8 ஜனாதிபதி தேர்தல்களிலும் தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்களின் பின்னே நின்றதையோ அல்லது சிங்கள தலைவர்களுக்கு வாக்களித்ததையோ வழக்கமாகக் கொண்டிருந்தனர். எனவே வழக்கம்போல தமிழ் மக்கள் இந்த சிங்களத் தலைவர்களுக்கு பின்னே நிற்பார்கள் அல்லது விரும்பியோ விரும்பாமலோ இவர்களுக்கு வாக்களிப்பார்கள். தமிழர்கள் மரமாக நிற்காமல் சிங்களம் என்ற மரத்தில் பற்றிப் படரும் படர்கொடி போலவே இலங்கை தீவில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்ற சிங்கள தேசத்தின் கனவு தமிழ் பொது வேட்பாளர் என்ற முடிவோடு உடைக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்கள் சுயமாக முடிவெடுத்து மரமாக எழுந்து நின்று விருட்சமாக வளர்வது சிங்களத் தலைவர்களால் பொறுக்க முடியாதுதான்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின் ஒரு தமிழ் பொதுவேட்பாளரை 2010 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நிறுத்த வேண்டுமென அவுபூர்வமாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்களத் தலைவர்களுக்கு வாக்களிக்கும் நிலைப்பாட்டையே தமிழ் அரசியல்வாதிகள் எனப்படுவோர் எடுத்து இதனையே தமிழ் மக்கள் மீது திணித்து சிங்களத் தலைவர்களுக்கு வாக்களிக்க வேண்டி நின்றனர்.

ஆனால் அந்நிலை இன்று மாற்றப்பட்டு விட்டது. இது சிங்களக் கட்சிகளோடு ஒத்தோடிகளாக இருந்த தமது தனிநலன்களை சுவீகரித்துக் கொண்ட தமிழ் அரசியல்வாதிகளுக்கும் ஒரு பலத்த அடியாகவே அமைந்து விட்டது.

தமிழ் அரசியல் வாதிகள் தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள தலைவர்கள் என்று கூறி அவர்களை நிராகரித்து தமிழ் மக்களுக்கு ஏதேனும் செய்யக் கூடியவர்கள் என்று ஆதரித்த அனைத்து சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களும் கடந்த காலங்களில் முதுகிலேயே குத்தி இருக்கிறார்கள்.

இத்தகைய கசப்பான வரலாற்று உண்மைக்கும், படிப்பினைக்கும் பின்னர்தான் இன்றைய அரசியல் சூழமையில் தமிழ் மக்கள் தமது இறைமையை தாமே கையில் எடுபதற்கும், தமது ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்கும், இலங்கை அரசியலில் தமது ஜனநாயக உரிமையின் வகிபாகத்தை வெளிப்படுத்துவதற்கும், தமிழ் மக்களின் தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கும், தமிழ் தேசியத்தை மீள்கட்டுமானம் செய்வதற்கான ஒரு அரிய வாய்ப்பாக ஜனாதிபதி தேர்தல் அமைந்து காணப்படுவதனால் இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துவதற்கு தமிழ் அறிவுசார் சமூகம் சரியான நேரத்தில் சரியான ஒரு முடிவை எடுத்திருக்கிறது.

தமிழ் மக்களின் அரசறிவியல் முதிர்ச்சியின் அரசியல் செயற்பாட்டு முனைப்பின் ஆரம்பத்தை, அதன் கருத்தியலை முளையிலேயே கிள்ளுவதற்கு சிங்கள தேசம் முனைகிறது. கடந்த நூறு ஆண்டுகால தமிழ் அரசறிவியல் சமூகத்தின் அரசியல் கருத்தியல் அரசியல் மயப்படுத்தப்படாமல், அரசியல் செயற்பாட்டுக்கு கொண்டு செல்லப்படாமல், கருத்தியலோடு நின்றதுதான் கடந்த 100 ஆண்டு கால தமிழ் மக்களின் அரசியல் தோல்விக்கு காரணமாக அமைந்திருக்கின்றது. இந்த அடிப்படை காரணங்களை அலசி ஆராய்ந்த தன் வெளிப்பாடு முதற்கட்டமாக ஒரு அரசறிவியல் கருத்து செயற்பாட்டுத்தளத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளது. பொது தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் என்ற கோட்பாடு அரசியல் மயப்படுத்தப்பட்டு செயற்பாட்டுக்கு வந்திருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் முடிவுற்றதேயன்றி தமிழ் மக்களுடைய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. அது ஜனநாயக ரீதியான போராட்டமாக வாக்குகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்

போராட்டமாக பரிணமித்துள்ளது. இதனை முடக்குவதற்கு சிங்கள தேசம் எத்தகைய விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கும். அதற்காக தமிழ் அரசியல்வாதிகளை விலைக்கு வாங்கவும், அரசியல் கட்சிகளை இரண்டாக உடைக்கவும், அரசியல் கருத்தியலில் மாறுபட்ட கருத்து உடையவர்களை தம்முடன் இணைக்கவும், அல்லது பின்கதவால் அவர்களுக்கு உரிய ஆதரவை வழங்கவும் சிங்கள அரசியல் தரப்பு எப்போதும் முற்படும். அதனை இப்போது தமிழ அரசியல் பரப்பில் வெளிப்படையாக காண முடிகின்றது.

ஒரு கட்சியின் இரண்டு தலைவர்கள் மாறுபட்ட கருத்தோடு இருப்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். இலங்கை தமிழரசு கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீதரன் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கிறார். கட்சித் தலைவர் தேர்தலில் தோல்வியடைந்த சுமந்திரன் சிங்களத் தலைவரான சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிக்கப் போவதாக குறிப்பிடுகிறார். இங்கே தென்னிலங்கை அரசியல் எவ்வாறு தமிழ் கட்சி ஒன்றினை இரண்டாக உடைப்பதனையும், தமிழ் மக்களின் ஐக்கியத்தை உடைப்பதில் எவ்வாறு உறுதியாக செயல்படுகிறார்கள் என்பதையும் நிரூபிப்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதுமானது.

தமிழ் மக்களிடையே உள்ள சில தீய சக்திகளும், குழப்பவாதிகளும், சிங்களத்தின் கையாட்களும் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் அந்நிய சக்திகளின் குறிப்பாக இந்தியாவின் நிகழ்ச்சிநிரல் என்றும் ஊளை இடுகின்றனர். இங்கே அரசியல் வரலாற்று அர்த்தத்திலும், தத்துவார்த்த அர்த்தத்திலும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். சிங்கள தேசியக் கட்சிகள் எதுவாயினும் இந்தியாவின் பக்கம் ஒருபோதும் நிற்கப்போவதில்லை. நின்றதும் கிடையாது. ராஜபக்சக்களின் அணியினராயினும் சரி, ரணிலின் அணியினராயினும் சரி, சஜித் பிரேமதாசா அணியினராயினும் ஜேவிபி அணியினராயினும் சரி அல்லது பௌத்த மகா சங்கத்தினர் ஆயினும் சரி அவர்கள் ஒருபோதும் இந்தியாவின் பக்கம் நிற்கப் போவதில்லை அடிப்படையில் இவர்கள் அனைவரும் இந்தியாவை தம்முடைய பொது எதிரியாகவும் முதன்மை எதிரியாகவும் கருதுபவர்கள். இவர்களுடைய அரசியல், மத, தத்துவவியல் என்பது அடிப்படையில் இந்திய எதிர்ப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டனவே.

எனவே இவர்கள் இந்த சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் பக்கம் நிற்கப் போவதில்லை. நிற்கவும் மாட்டார்கள். இங்கே யார் பதவிக்கு வந்தாலும் தமது தேவைக்கு ஏற்ப அவ்வப்போது இந்தியாவுடன் கூட்டு சேர்வதாக அல்லது அவர்களுடன் ஒத்துழைப்பதாக ஒரு பாசாங்கை காட்டுவார்கள். எத்தகைய நிலைமையிலும் தமது நலன்களை அடைவதற்காக “ஓரடி பின்னேயும் ஈரடி முன்னேயும் “ என்ற நடைமுறையைத்தான் சிங்களவர் பின்பற்றுவார்கள். தமது நலன்கள் அடையப்பட்டுவிட்டதும் அவர்கள் எதிரணியில் மீண்டும் வந்து நிற்பார்கள். இதுவே கடந்த 2300 ஆண்டுகால இலங்கை-இந்தியா வெளியுறவுக் கொள்கையின் நீண்ட வரலாறாகும்.


ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் எந்தச் சந்தர்ப்பத்திலும் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் போவதில்லை. அத்தோடு பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தமிழ் மக்கள் ஐக்கிய படுவதனாலும் இந்தியாவுக்கு எந்த நன்மையும் கிட்ட போவதில்லை. இந்தியா தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கின்றது என்று கூறுபவர்கள்தான் பொதுவேட்பாளர் என்பது இந்தியா பின்னே இருக்கிறது என்கிறார்கள். இங்கே முரண்னகை இருப்பதை காணலாம். இவர்கள் கூற்றுப்படி தமிழ் மக்களுக்கு எதிராக இந்தியா இருக்கிறது என்றால் அது தமிழ் மக்கள் ஐக்கிய படுத்துவதை எவ்வாறு விரும்பும்? தமிழ் மக்கள் பலம் பெறுவதை இந்தியா ஏன் ஆதரிக்க வேண்டும்? இவ்வாறு இந்தியா நிற்கின்றது என்று சொல்பவர்கள் தமது கனவுகளில், கற்பனைகளில் சிந்தித்து வாய்க்கு வந்தபடி பேசட்டும். ஆனால் வரலாற்று நடைமுறையில் இவை அர்த்தமற்ற கற்பனாவாதங்களே.

இந்தியா இலங்கைக்கு அருகில் இருக்கும் மிகப்பெரிய நாடு என்ற அடிப்படையில் இயல்பாக இலங்கை ஆட்சியாளர்களுக்கு இந்தியா மீது அச்சம் எப்போதும் இருக்கும். ஆனால் இந்தியாவை பொறுத்தளவில் அது தனக்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு குட்டி நாடாகவே இலங்கையை பார்க்கிறது. இந்த அடிப்படையில் எப்போது வேண்டுமானாலும் இலங்கையை நயத்தாலோ, பயத்தாலோ தனது மேலாண்மைக்கு கீழ் தொடர்ந்து வைத்திருக்கலாம் என இந்திய ஆட்சியாளர்கள் நம்புகின்றனர். இந்நிலையில் தமிழ் பொது வேட்பாளரின் பக்கம் இந்தியா நிற்பதற்கான எந்தத் தேவையும் கிடையாது.

ஆனாலும் நடைமுறையில் இந்தியா-இலங்கை நீண்ட வெளியுறவு கொள்கை வரலாற்றில் இந்தியாவினால் இலங்கையை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியவில்லை. இலங்கை தனது வெளியுறவு கொள்கையில் ராஜதந்திர உத்திகளால் எப்போதுமே இந்தியாவை வெற்றி கொண்ட வரலாற்றையே கடந்த 2300 ஆண்டுகால இலங்கை வெளியுறவு கொள்கை வரலாற்றில் பதியப்பட்டிருக்கிறது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

தமது படை, பட்டாளம், கோட்டை, கொத்தள இராணுவ பலத்துடன் நின்று அரசிற்கு எதிராகப் போராடும் திட்டத்துடன் புலிகள் ஜனாதிபதித் தேர்தலைபகிஷ்கரித்தார்கள். அது ஒரு பலம்சார்ந்த போராட்டத் திட்டத்துடன் நிகழ்ந்தது. ஆனால் இன்று தேர்தல் பகிஷ்கரிப்பு என்பதன் மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதும், தமிழ் மக்களின் இறைமையை மறுப்பதும், சிங்கள தலைவர்களின் வெற்றியை இலகுபடுத்துவதுமான செயல்பாடாகவே தேர்தல் பகிஷ்கரிப்பு அமையும். அடிப்படையில் இது சிங்கள தேசத்திற்கு சேவகம் செய்யும் அரசியலாகவே அமைந்துவிடும்.

தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள குறிப்பிட்டுச் செல்லக்கூடிய தேசியம் பேசும் கட்சிகளில் எட்டு கட்சிகள் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துவிட்டன. ஒரு கட்சியின் அரைவாசினர் ஆதரவு நிலையை எடுத்துள்ளனர். ஆகவே எட்டரைக் கட்சி ஆதரவு நிலையில் உள்ளன. ஒரு கட்சி பகிஸமகரிப்பு என்ற நிலை எடுத்துள்ளது. ஆக மொத்தத்தில் இன்றைய நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள குறிப்பிடக்கூடிய 11 கட்சிகளில் பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா தவிர்ந்த ஒன்பது கட்சிகளில் எட்டரை கட்சியினர் பொது வேட்பாளருக்கு ஆதரவு நிலை எடுத்துள்ளனர் என்பது தமிழ் மக்களின் அரசியல் ஐக்கியத்தில் ஒரு கணிசமான முன்னேற்றத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது. எனினும் இவற்றின் செயற்பாடுகள், உள்ளக முரண்பாடுகளை கழைதல் என்பவற்றில் நீண்ட தூரம் முன்னேறி பயணிக்க வேண்டியது என்பதும் உண்மைதான்.


President Ranil Wickremesinghe


Opposition Leader Sajith Premadasa


JVP/NPP Leader Anura Kumara Dissanayake

# ஓரணியில் திரளாக ஒன்றுபடுவதே இரா. சம்பந்தனின் ஆன்மாவிற்கு

## நாம் செய்கின்ற உண்மையான அஞ்சலி - ஜனநாயக போராளிகள் கட்சி




இரா.சம்பந்தர் ஐயாவின் மறைவு தமிழ் தேசிய அரசியல் தளத்தில் தலைமைத்துவ வெற்றிடத்தை ஏற்படுத்தி உள்ளது அதனை நிரப்பிக்கொள்ள வேண்டிய காலக்கடமை தளத்தில் செயலாற்றுகின்ற அனைத்து தமிழ்தேசிய அரசியல் கட்சிகளுக்கு உள்ளது. அனைவரும் ஓரணியில் திரளாக ஒன்றுபடுவதே நாம் இரா. சம்பந்தரின் ஆன்மாவிற்கு செய்கின்ற உண்மையான அஞ்சலியாகும் என ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை இந்திய உடன்படிக்கையில் வடகிழக்கு இணைப்பின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் காத்திரமாக இந்திய பிரதமருக்கு வலியுறுத்தி அவ்விடயத்தினை ஒப்பந்ததில் இடம்பெற செய்த வரலாற்று கடமையினை ஆற்றியவர் இரா. சம்பந்தரே ஆவார். இலங்கை இந்திய உடன்படிக்கைக்கு அமைய கோரப்பட்ட இடைக்கால நிர்வாகத்திற்கு கூட்டனி சார்பில் இரா. சம்பந்தரே பிரேகரிக்கப்பட்டவராவார்.

2004 தமிழினத்தின் ஜனநாயக ஒற்றுமையினை கருதில்கொண்டு அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் ஒன்றிணைத்து ஜனநாயக அரசியல் பலத்தினை மக்கள் ஆணைக்காக கொண்டுசெல்லும் செயற்பாடுகளில் தலைமையாக இரா. சம்பந்தர் சிறப்பாக செயலாற்றினார் என்பதனை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

2009 போர் மௌனித்துபோனதின் பின்னரான தமிழ் அரசியல் பரப்பில். 2015 இலங்கையின் எதிர்க்கட்சி தலைவராக தெரிவாகியமை அவரின் இராஜதந்திர நகர்வின் உச்சமாகவே கருதப்படுகிறது. அந்தவகையில் இனத்தின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக புதிய அரசியலமைப்பு பணிகள் சர்வதேச நாடுகளின் உடனான பேச்சுக்கள் குறிப்பாக இந்திய தரப்புக்களுடனான நகர்வுகளில் இரா. சம்பந்தர் ஆற்றிய பணிகள் என்றும் தமிழினத்தால் நினைவில் கொள்ளத்தக்கது.

இந்த நிலைமைகளில் இரா. சம்பந்தரின் மறைவு பெரும் அரசியல் தலைமைத்துவ வெற்றிடத்தை தமிழ்தேசிய பரப்பில் உண்டாக்கி உள்ளதென்பதே உண்மையாகும். தமிழினம் இனப்பிரச்சினைக்கானநிரந்தர தீர்வுமின்றி சமூக பொருளாதார அரசில் பலம் சிதைவுகளுக்கு உள்ளாக்கப்பட்டு திக்கற்ற நிலையில் தமிழினத்தின் தற்போதைய நிலையில் இரா. சம்பந்தரது இழப்பு பேரிழப்பாகும் அதன் தாக்கமானது எதிர்கால தாயக பிராந்திய சர்வதேச அரசியல் விவகாரங்களை கையாளுகின்றபோது தமிழினத்திற்கு பெரும் பின்னடைவுகளை உருவாக்கும்.

நிலைமைகளை கருத்தில்கொண்டு அனைத்து தமிழ்தேசிய கட்சிகளும் ஒன்றினைவதே இரா. சம்பந்தருக்கு நாம் ஆற்றுகின்ற அஞ்சலியாகும்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது மக்களின் சார்பிலும் போராளிகள் சார்பிலும் ஆழ்ந்த அஞ்சலிகளை தெரிவித்து கொள்கின்றோம்.




# சட்ட விரோத துப்பாக்கி வழக்கு .. உக்ரேன் அரசுடன் ஊழல் குற்றச்சாட்டு .. ஹண்டர் பைடனுக்கு சிறை தண்டனை ?

அமெரிக்க வரலாற்றில் பதவியில் இருக்கும் அதிபரின் மகன் குற்றவாளி எனத் தீர்ப்பளிக் கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை. இதற்கு முன்னரும் உக்ரேனிய அரசுடன் ஊழல் மூடி மறைப்புக்கும், உக்ரேனிய வணிக உட ன்பாடு ஊழலுடன் ஹண்டர் பைடனுக்கு குற்றச்சாட்டுக்கள் இருந்தன.

**சட்ட விரோத துப்பாக்கி வழக்கு:**

சட்ட விரோதமாகத் துப்பாக்கி வாங்கிய வழ க்கில், அமெரிக்க அதிபர் பைடனின் மகன் ஹண்டர் பைடன் (Hunter Biden) குற்றவாளி என்று அமெரிக்க நீதிமன்றம் ஜூன் 12இல் வாஷிங்டனில் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்காவில், துப்பாக்கியை 18 வயதை கடந்தவர்கள் அனைவரும் சட்டப்பூர்வமாக

> **ஜோ பைடனின் ஆட்சிக் காலத்தில் இந்த உக்ரேனிய ஊழல் வழக்குகள் கிடப்பில் போடப்பட்டன என்பதே உண்மை. ஏப்ரல் 2015 இல் இருந்து ஒரு மின்னஞ்சல் உக்ரேனிய புரிஸ்மாவின் ஆலோசகர் வாடிம் போஜார்ஸ்கி, வாஷிங்டனில் ஜோ பைடனை சந்திக்க அழைத்ததில் இருந்து இந்த சர்ச்சை கிளம்பியது.**

கடைகளில் சென்று வாங்கலாம். இதற்காக ஒரு விண்ணப்பத்தை அவர்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதில், போதைப் பொருள் பயன்பாடு உள்ளிட்டவை கள் இருக்கும். இந்நிலையில், ஹண்டர் பைடன் கடந்த 2018-ஆம் ஆண்டு கடைக்கு சென்று துப்பாக்கி ஒன்றை வாங்கியுள்ளார்.

துப்பாக்கியை வாங்கும்போது தாம் சட்ட விரோதமாகப் போதைப்பொருள் பயன் படுத்தவில்லை என்று 54 வயது ஹண்டர் பொய் சொன்னதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

அவர் நிரப்பிக் கொடுத்த விண்ணப்பத்தில் போதைப்பொருள் பயன்பாடு குறித்த கேள் விக்கு, அவர் போதைப் பொருள் எதையும் பயன்படுத்தவில்லை என்று குறிப்பிட்டுள் ளார். இருப்பினும், ஹண்டர் பைடன் அப் போது போதைப் பொருளைப் பயன்படுத்தி வந்துள்ளார். மேலும், இந்த துப்பாக்கியை அவர் சுமார் 11 நாட்கள் வைத்து இருந்ததாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக, கடந்த 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இவர் மீது வழக்குகள் தொடரப்பட்டன. போதைப்பொருள் பயன் பாடு தொடர்பாக அமெரிக்க அரசிடம் பொய் தெரிவித்தது, போதைப் பொருள் பயன்படுத் தும் போது துப்பாக்கியை வைத்திருந்தது உள்ளிட்ட 3 வழக்குகள் அவர் மீது சுமத்தப் பட்ட நிலையில், அவர் குற்றவாளி என்று அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

**உக்ரேனிய வணிக உடன்பாடும் ஊழலும்**

2016 இல் ஹண்டர் பைடனின் உக்ரேனிய நிறுவனத்துடனான ஊழலை விசாரித்து வந்த அதன் உயர்மட்ட வழக்கறிஞரை பதவி நீக்கம் செய்யுமாறு அன்றைய உக் ரைன் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வந்தார்.

ஹண்டர் பைடனின் உக்ரேனிய 'புரிஸ்மா' மற்றும் பிற நிறுவனங்கள் ஊழல் விசார ணையில் தற்போதும் உள்ளன. இருப்பி னும், மற்ற மேற்கத்திய தலைவர்கள் மற் றும் உக்ரைனுக்கு நிதியுதவி வழங்கும் முக் கிய அமைப்புகளும், ஊழலைச் சமாளிப் பதில் அவர் போதுமான அளவு செயல்பட வில்லை என்று நம்பியதால், வழக்குரை ஞரை பணிநீக்கம் செய்ய விரும்பினர்.

ஹண்டர் பைடன் உக்ரேனில் அவர் மேற் கொண்ட சில வணிகப் பரிவர்த்தனைகள் உட்பட, அமெரிக்க ஊடக அறிக்கைகளின் படி, அவரது நிதி தொடர்பாக நீதித்துறையால் 2020இல் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வந் தது.

**உக்ரேனிய வணிக உடன்பாடு :**

ஆயினும் பின்னர் ஜனாதிபதி ஜோ பைட னின் ஆட்சிக் காலத்தில் இந்த வழக்குகள் கிடப்பில் போடப்பட்டன. 2020 தேர்தல் பிரச் சாரத்தின் போது, சீனா மற்றும் உக்ரைன் தொடர்பில் அவரும் அவரது தந்தையும் குற்றம் சாட்டப்பட்டனர். அதை அவர்கள் இரு வரும் மறுத்தனர்.

உக்ரேனிய எரிசக்தி நிறுவனமான புரிஸ்மா வின் ஆலோசகர், ஜோ பைடனைச் சந்திக்க அழைத்ததற்கு நன்றி தெரிவித்ததாகக் கூறப்படும் மின்னஞ்சலில் குற்றச்சாட்டுகள் பற்றி கேட்டதற்கு, ஜோ பைடன் ஒரு நிருபரி டம் இது ஒரு "ஸ்மியர் பிரச்சாரம்" (Smear Campaign) என்று கூறி தப்பிக் கொண்டார். பைடன் மகனின் உக்ரேனிய நிறுவனங் களுடனான வணிக உடன்பாடும், ஊழல் மூடி மறைப்பும் பாரியளவில் ஊடகங்களில் கசி ந்தது.

**25 ஆண்டுகள் சிறை தண்டனை:**

தற்போது இவருக்கு எதிரான முதல் 2 வழ க்குகளில் தலா 10 ஆண்டுகளும், 3-வது வழக்கில் 5 ஆண்டுகள் என மொத்தம் 25 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க ப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபரின் மகன் ஒருவருக்கு குற்ற வழக்கில் தண்டிக்கப்படு வது இதுவே முதல் நிகழ்வாகும்.

இந்த தீர்ப்பை எதிர்த்து ஹண்டர் பைடன் மேல்முறையீடு செய்யவுள்ளார். மேலும், அதிபர் ஜோ பைடன் குடும்பம் பாரிய கலக் கத்தில் அதிர்ந்து போயுள்ளதாக முன்னாள் அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

**மகனாயினும் மன்னிப்பு இல்லை:**

இந்நிலையில், அமெரிக்காவில் அதிகம் பேசப்பட்டு வரும் தனது மகன் வழக்கில், அவர் குற்றவாளி என உறுதிசெய்யப்பட்டால் அவரை மன்னிக்கப் போவதில்லை என்று ஹண்டரின் தந்தையும், அமெரிக்க அதிபரு மான ஜோ பைடன் அதிரடியாக அறிவித்து ள்ளார்.

அதிபர் பைடன் மகனுக்கு எதிரான வழக் கின் முடிவை ஏற்றுக் கொள்வதாகவும் நீதிம ன்ற நடைமுறையை மதிப்பதாகவும் கூறி னார்.

மேலும், நான் அதிபராக இருந்தாலும் ஒரு தந்தையாக, எனது மகன் மீது அளவு கடந்த அன்பு வைத்துள்ளேன். எங்களது குடும்பம் நிறைய கஷ்டங்களை சந்தித்துள்ளது. ஒரு தந்தையாக எனது மகனுக்கு எப்போதும் பக்கத்துணையாக நிற்பேன் என்றும் தெரிவி த்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (Joe Biden) தான் நாட்டுக்கு அதிபராக இருந்தாலும் தன் மகனுக்குத் தந்தைதான் என்று கூறினார். ஹண்டர் பைடன் ஒரு வழக்கறிஞர். பிரபல யேல் (Yale) பல்கலைக்கழகத்தில் படித்தவர்.

தம் மகனுக்குத் தமது அன்பும் ஆதரவும் எப்போதும் உண்டு என்று அவர் சொன் னார். 2018ஆம் ஆண்டு கொக்கேய்ன் (Cocaine) போதைப்பொருளுக்கு அடிமையாக இருந்தார் எனவும் கூறினார்.

**ஹண்டர் பைடனின் உக்ரேனிய தொடர்பு :**

ஜோ பைடனின் ஆட்சிக் காலத்தில் இந்த உக் ரேனிய ஊழல் வழக்குகள் கிடப்பில் போடப் பட்டன என்பதே உண்மை. ஏப்ரல் 2015 இல் இருந்து ஒரு மின்னஞ்சல் உக்ரேனிய புரிஸ்மாவின் ஆலோசகர் வாடிம் போஜார் ஸ்கி, வாஷிங்டனில் ஜே பைடனை சந்திக்க அழைத்ததில் இருந்து இந்த சர்ச்சை கிளம் பியது.

ஹண்டர் பைடன் உக்ரேனிய புரிஸ்மாவின் குழுவில் இயக்குநராக இருந்துள்ளார். புரிஸ்மா உக்ரைனுக்குச் சொந்தமான ஒரு தனியார் எரிசக்தி நிறுவனம். அதன் குழு வில் இருந்த பல வெளிநாட்டவர்களில் ஹண்டர் பைடன் ஒருவராக இருந்தார்.

உக்ரேனிய தொடர்பையும், வணிக ஊழ லையும் ஜோ பைடனின் அரசு, நியூயார்க் போஸ்ட் வெளியிட்ட ஆய்வை "ரஷ்யாவின் பிரச்சார தகவல்" என்று கண்டித்துள்ளது, இருப்பினும் மின்னஞ்சல்கள் போலியா னவை என்று அவர்கள் கூறவில்லை.

அப்போது நியூயார்க் போஸ்ட் கட்டுரையை அதிபர் டிரம்ப் மற்றும் அவரது கட்சி பகிர்ந்து கொண்டனர். அவரது முன்னாள் ஆலோச கர்களில் இருவர், ஸ்டீவ் பானன் மற்றும் ரூடி கியுலியானி, பகிரங்கமாக செய்தித்தாள் களுக்கு இக்கதை மற்றும் மின்னஞ்சல்கள் அடங்கிய ஹார்ட் டிரைவை வழங்குவதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

பின்னர் 2019 டிசம்பரில் திரு கியுலியானி உக்ரேனிய தலைநகர் கிய்வ் நகருக்குச் சென்று,அங்கு அவர் உக்ரேனிய சட்டமியற் றுபவர் ஆண்ட்ரி டெர்காச்சை சந்தித்தார்.

திரு கியுலியானி உக்ரைனில் உள்ள ஜே பிடென்ஸ் மீது உள்ள ஊழல் தொடர்பை தோண்டி எடுக்க முயற்சித்ததை ஒப்புக் கொண்டார். ஆனால் அன்றைய அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குனர் ஜான் ராட்க் ளிஃப் தகவலின் படி உக்ரேனிய மின்னஞ் சல்களை மூடி மறைத்த விடயத்தை ஒப்புக் கொண்டார்.

அமெரிக்க ஊடகங்கள் மின்னஞ்சல்களின் நம்பகத்தன்மையை வெளியிட்டாலும், பின் னர் ஜனாதிபதி ஜோ பைடனின் ஆட்சிக் கால த்தில் இந்த வழக்குகள் கிடப்பில் போடப்பட் டன என்பதே உண்மையாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# தீர்மானிக்கும் சக்தியாக ஏன் தமிழர்கள் இருக்கக் கூடாது? பொது வேட்பாளர் தொடர்பில் சிறீதரன் எம்.பி கேள்வி?



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வரலாறு தந்திருக்கின்ற சந்தர்ப்பம் தான் தமிழ் பொது வேட்பாளர். எனவே தமிழ் பொது வேட்பாளரை இறுக பற்றிப் பிடித்து இந்த மண்ணில் தமிழ் இனம் யார் என்பதைக் காட்டும் சந்தர்ப்பம் இதுவே என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த 2005 ஆம் ஆண்டு ஒரு தலைமைத்துவத்திற்குக் கீழ் செயற்பட்டு அன்று உலகத்திற்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது. அந்த செய்தியை ஜனநாயகத்தைப் பயன்படுத்த தவறியதாக சில நாடுகள் குற்றம் சுமத்துகின்றன. யுத்தம் முடிந்தவுடன் பொன் சேகாவுக்கு ஆதரவு அளித்து அவர் தோல்வி அடைந்தார். அதற்கு பிறகு எங்களுக்காக அவர் எதனையும் இதுவரை கதைக்கவில்லை.

மைத்திரி, மகிந்த தேர்தலில் போட்டியிட்ட போது இரண்டும் எதிரி, அதில் யாருக்கு ஆதரவளிப்பது என தீர்மானித்து மைத்திரிக்கு ஆதரவளித்தோம். அதிலும் தோற்றோம். அடுத்து சஜீத்துக்கு ஆதரவு அளித்தோம் அங்கும் இராஜதந்திரம் தோல்வியடைந்தது. நாட்டில் அரகலய போராட்டத்தைத் தொடர்ந்து டலஸ், ரணில் போட்டியிட்டபோது டலஸ்க்கு ஆதரவு அளித்தோம் அங்கும் தோல்வியடைந்தோம். மக்களிடத்தில் அபிவிருத்தி தேவையுள்ளது. மேடையில் அதைப் பற்றி நாங்கள் கதைக்கவில்லை. உரிமைக்காகவே மக்கள் என்றும் வாக்களிக்கின்றனர். எங்கள் சுக போகத்திற்காக இல்லை.

15 வருட வரலாற்றில் அநுர .சஜித், ரணில் பேசிய வரலாறு இல்லை. ஆனால் இப்பொழுது பேசுகிறார்கள் அவர்களுக்கு தேவை ஏற்பட்டுள்ளது. தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் நாங்கள் ஏன் பொது வேட்பாளரை இறக்கக்கூடாது. 13ஜ நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜெய்சங்கருடன் கதைத்தோம். தமிழ் நாட்டில் பொலிஸ், நிதி அதிகாரங்கள் இருக்கிறது எமக்கு இல்லை. வடக்கு மாகாண சபை முறைமை தான் 13. இதில் மாகாணத்தில் தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லை.

பொது வேட்பாளரை களமிறக்கும் போது வேட்பாளர்கள் இறங்கி வருவார்கள். 13ஜ விட மேலதிகமாக ஒன்றை தருகின்றோம் என்று சொன்னால் அதைப் பற்றி யோசிப்போம் ஏற்கனவே உள்ள 13ஜ தருவோம் என்று சொல்கிறார்கள். 34 வருடமாக பொலிஸ் அதிகாரம் இல்லை, காணி அதிகாரம் இல்லை மத்திய அரசாங்கம் காணிகளைப் பிடிக்கிறது. எனவே வரலாறு தந்திருக்கிற சந்தர்ப்பத்தை தவறாது இறுக்கமாக பிடித்து இந்த மண்ணில் நாம் யார் என்பதை காட்டலாம்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமக்கானத் தீர்வை வெளியிட்டால் சிங்கள மக்களிடத்தில் செல்வாக்கு இல்லை என்றால் இந்திய, அமெரிக்க, பிரித்தானியா தூதுவருக்கு முன்பாக மறைமுகமாகத் தீர்வை எழுதித் தாருங்கள் எனவும் சிறீதரன் தெரிவித்தார்.

# இரா.சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் ஓர் பேரிழப்பாகும்.



தமிழ் மக்களால் தமிழ்த் தேசியப் பெருந் தலைவராகப் பார்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலை வரும் திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைத் தீர்வுக்கான பயணத்தில் பாரியதொரு இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது.

தந்தை செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் தலைவர்கள் வரிசையில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற மறைந்த அரசியல்வாதிகள் வரிசையில் சம்பந்தனும் இணைந்துகொண்டுள்ளார்.

1977களில் தன்னை நாடாளுமன்ற அரசியலுக்குள் தன்னை நுழைத்துக் கொண்ட சம்பந்தன் அவர்கள் 1983 ஜூலைக் கலவரத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டும், இலங்கை அரசியலமைப்பின் 6ஆம் திருத்தத்திற்கு ஆதரவளிக்கமுடியாது என்றும் எதிர்ப்பினை வெளிக்காட்டியமையினால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருந்தார். இருந்தாலும் அதன் பின்னரான 18 வருடகாலங்கள் நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியில் இருந்திருந்த போதிலும் 2001ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தினை தக்கவைத்திருந்தார். அது தமிழ் மக்களுக்கான அவருடைய அரசியல் பணிக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

2009க்குப் பிறகு தமிழ் மக்களின் உரிமைப் பேராட்டத்திற்கு தலைமை தாங்கியது மட்டுமல்ல ஒருமித்த, பிரிக்கப்படாத நாட்டுக்குள் பல விமர்சனங்களுக்கும் பலரது வேறு விதமான விருப்பங்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்களது பிரச்சினைக்கு ஒரு சமரஷ்டி முறையிலான தீர்வைக் கொண்டுவருவதற்கு முயற்சித்தார். அவ்வேளைகளில் மாறி மாறிவந்த அரசுத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டவர். அதே நேரத்தில் முஸ்லிம் மக்களையும், அவர்களது பிரச்சினைகளையும் சமாந்தரமாக அணுகுவதிலும் பின்நிற்கவில்லை. அதனால் தமிழ் மக்களிடமும் தமிழ் அரசியல்வாதிகளாலும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்தார்.

தன்னுடைய முதுமையினையும் பொருட்படுத்தாது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொடர்ச்சியாகப் பாடுபட்டவரான ஆர்.சம்பந்தன், வெளிநாட்டு தூதுவர்கள், உலக நாடுகளின் தலைவர்களாலும் மரியாதையுடன் பார்க்கப்பட்டவராக இருந்தார். சர்வதேச இராஜதந்திர மட்டத்திலும், பெரும்பான்மை அரசியல் தலைவர்களிடமும் தமிழ் மக்களுடைய விடயங்களை எடுத்தியம்பும் வகையில் தன்னுடைய அரசியலை தொடர்ந்து வந்திருந்த அவர் இறுதி நேரத்திலும் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொள்வதில் ஜனநாயக வழிமுறையில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார்.

அந்தவகையில்தான் தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சிங்கள அரசியல்வாதிகளுடனும் கலந்துரையாடியதுடன், 2015ஆம் ஆண்டு அமைந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த வேளையில் அரசியலமைப்பு மாற்றத்திற்காக பாடுபட்டிருந்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழிமுறைகளில் இடைவிடாது அரசியல் ரீதியாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவு தமிழ் மக்களின் அரசியல் பயணத்தில் ஓர் பேரிழப்பாகும்.

2001ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் தலைமைதாங்கி வழிநடத்திவந்த இரா.சம்பந்தன் கூட்டமைப்பின் பிளவிலும், தனது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிக்கல்களிலும் அண்மைக்காலங்களில் மனம்நொந்திருந்தார். அந்தவகையில், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஒன்றுமையும் ஒருமிப்பும் ஒருங்கிணைந்த தமிழ்த் தேசியப் பயணமுமே நாம் அவருக்குச் செய்யும் இறுதிக் கடனாகும்.

ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியை இழந்து துயருறும் தமிழ் மக்கள், அவருடைய குடும்பத்தார், அவருடைய கட்சியினர், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஜனாதிபதியின் பதவி முடிவதற்கு முன் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

**சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு!**







ஜனாதிபதி ரணிலின் பதவிக்காலம் முடிய முன்னர் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே சுமந்திரன் எம்.பி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பந்தனின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்த ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தானும், சம்பந்தனும் 1977ஆம் ஆண்டு ஒன்றாக பாராளுமன்றத்தில் நுழைந்ததாக குறிப்பிட்டார். அத்துடன் தனது ஆயுட் காலத்தின்போது இனப்பிரச்சினை தீர்க்க வேண்டும் என மீண்டும் குறிப்பிட்டார். ஆனால் துரதிஷ்டவசமாக அவர் இறந்து விட்டார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியிடம் மீண்டும் வேண்டுகோள் விடுப்பது என்னவென்றால் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு முன்பு இது தீர்க்கப்பட வேண்டும் என நான் வினயமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார்.



# பிரித்தானியாவில் கவனம்பெறும் ஈழத் தமிழ் அரசியல்!

பிரித்தானியாவில் வரும் ஜுலை 4ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ளது. அண்மையில் பிரித்தானியாவில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் இடைத்தேர்தலில் ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சி பெரும் பின்னடைவை சந்தித்தது.

அதை அடுத்து, பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் உடனடியாகவே பொதுத் தேர்தலை அறிவித்து, பாராளுமன்றத்தையும் கலைக்க நடவடிக்கை எடுத்தார். இந்த தேர்தலில் தொழிற்கட்சி பெரும் வெற்றியைப் பெறக் கூடும் என கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. 650 உறுப்பினர்களைக் கொண்ட பிரித்தானிய பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு நடைபெறவுள்ள தேர்தலில், தொழிற்கட்சி 400க்கும் அதிகமான ஆசனங்களை கைப்பற்றும் வாய்ப்புகள் உள்ளதாக பெரும்பாலான கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு 100க்கும் சற்று அதிகமான ஆசனங்களே கிடைக்கும் என்றும் கணிக்கப்படுகிறது. பிரித்தானிய பொதுத்தேர்தல், ஈழத் தமிழர்களை பொறுத்தவரையில் முக்கியமான ஒன்றாக பார்க்கப்படுகிறது. புலம்பெயர் தமிழர்களின் வகிபாகம் மற்றும், இந்த தேர்தலின் மூலம்வரப் போகும் போகும் புதிய அரசாங்கம் இலங்கை தொடர்பாக கடைபிடிக்கக் கூடிய கொள்கை ஆகிய விடயங்களால் அது முக்கியமானதாக கருதப்படுகிறது. பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தலில், பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி இரண்டு ஈழத் தமிழ்ப்பெண் வேட்பாளர்களைப் போட்டியில் நிறுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட உமா குமரன் கிழக்கு லண்டன் ஸ்டாட் போர்ட் அன் போ (Stratford and Bow) தொகுதியிலும், கிருஷ்ணி ரிஷி கரன் சட்டன் அன்ட் சேம் (Sutton and Cheam) தொகுதியிலும், தொழிற்கட்சி சார்பில் போட்டியிருக்கிறார்கள். இந்த முறை ஸ்டாட்போர்ட் அன்போ தொகுதியில் போட்டியிடுகின்ற உமா குமரன், கடந்த 2015 பாராளுமன்றத் தேர்தலில் ஹரோ ஈஸ்ட் தொகுதியில் போட்டியிட்டு, 19,911 வாக்குகளைப் பெற்றிருந்தார். கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளரிடம் அவர், 5, 757 வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்திருந்தார்.



அதேபோல, சட்டன் அன்ட் சேம் தொகுதியில் போட்டியிடும் கிருஷ்ணி ரிஷிகரன், 2022 ஆம் ஆண்டு நடந்த குரோய்டன் நகரசபைத் தேர்தலில், வெஸ்ட் தோர்ன்டன் வட்டாரத்தில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்டு, 1,684 வாக்குகளுடன், மூன்றாவது உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். முதலாவது உறுப்பினராக தெரிவா னவருக்கும் கிருஷ்ணி ரிஷிகரனுக்கும் இடையில், 212 வாக்குகளே வித்தியாசமாக இருந்தது. அதே வட்டாரத்தில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட பற்றிக் ரட்ணராஜா என்ற தமிழர், 818 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

2015 இல், உமா குமரன் போட்டியிட்ட ஹரோ ஈஸ்ட் தொகுதியில், தெற்காசிய இனத்தவர்கள் அதிகம். ஆனாலும், கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் பொப்பி ளாக்மனிடம் அவர் தோல்வியடைந்தார். ஆனால் இந்த முறை அவர், போட்டி யிடும் ஸ்ராட்போர்ட் அன் போ தொகுதி, தொழிற்கட்சிக்கு மிகவும் சாதகமானது. பொதுவாக தொழிற்கட்சி வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் உள்ள சூழலில் ஏற்கனவே அந்தக் கட்சி செல்வாக்கு பெற்றுள்ள, தொகுதியில் போட்டியிடும் உமா குமரனுக்கு இந்த தேர்தலில் வெற்றி வாய்ப்பு மிக மிக அதிகம்.

இவர் வெற்றி பெற்றால், தொழிற்கட்சி அரசாங்கத்தில் இளநிலை அமைச்சர் பதவி வழங்கப்படும் சாத்தியங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. கனடாவில் ஹரி ஆனந்தசங்கரி பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பதவி வகிக்கிறார். ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் இப்போது துணை அமைச்சராகவும், நிய மிக்கப்பட்டிருக்கிறார். அதுபோல பிரித்தானியாவிலும், வரப்போகும் பொதுத் தேர்தலுக்கு பின்னர் புலம்பெயர் தமிழர்களின் அரசியல் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளன.

பிரித்தானிய தேர்தலில், கொன்சர்வேட்டிவ் கட்சி சார்பில், தற்போது அமைச்சராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க என்ற புலம்பெயர் சிங்களவர், மீண்டும் போட்டியிடுகிறார். சரித் குணவர்தன என்ற புலம்பெயர் சிங்களவரும், பசுமைக் கட்சி சார்பில் போட்டியிடுகிறார் இவர்கள் இலங்கை வம்சாவளியினராக இருந்தாலும், தொழிற்கட்சியில் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்கு அதிகம் காணப்படுகிறது. தொழிற்கட்சி இரண்டு ஈழத்தமிழர்களை மாத்திரமே வேட்பாளர்களாக நிறுத்தி இருக்கிறது.

இந்த நிலையில் கடந்த வாரம் பிரித் தானிய பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தமிழ் விவாதம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அதில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில், பிரதி வெளிவிவகார அமைச்சர் அன்ட்ரூ மிட்செல், தொழிற்கட்சியின் சார்பில், ஆசியாவிற்கான நிழல் அமைச்சர் கதரின் வெஸ்ட், பசுமை கட்சியின் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் ஆதரவு பேச்சாளர் பெனாலி ஹம் தாச்சே ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த விவாதத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்திருந்த, ஆளும்கட்சியைச் சேர்ந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் அன்ட்ரூ மிட்ச்செல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த நடவடிக்கைகளுக்கு கொன்சர்வேர்டிவ் கட்சி தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுக்கும் எனக் கூறினார். ஐ.நா. பாதுகாப்பு சபையில் இலங்கை விவகாரத்தை எழுப்புவது குறித்து நிச்சயமாக ஆராய்வோம் என்றும், பிரித்தானியாவில் உள்ள தமிழ் சமூகத்தினர் அதற்கான அழுத்தங்களை கொடுத்தால் நிச்சயமாக அதனை செய்வோம் என்றும் குறிப்பிட்டார்.

**இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை, தொழிற்கட்சி ஏற்றுக் கொள்கிறது. இலங்கையில் இடம்பெற்ற மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் உறுதியளிக்கிறது.**

தடைகள் குறித்து முன்கூட்டியே விவாதிப்பது, தடைகள் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைக்கும் என்பதால் அது குறித்து விவாதிக்க விரும்பவில்லை என்றும் அவர் நழுவியிருந்தார். பிரிட்டனின் கொள்கை. ஒருநாடு சார்ந்தது அல்ல என்றும், மாறாக குற்றங்களை அடிப்படையாக கொண்டவை என்றும், இந்த விடயத்தில் இலங்கை அலட்சியம் செய்யப்படவில்லை என்றும், அன்ட்ரூ மிட்ச்செல் குறிப்பிட்டார்.

இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை நீதிமன்றங்களே தீர்மானிக்கும் என்றும், இலங்கை மீது வர்த்தக தடைகளை விதிப்பது பொருத்தமானதல்ல என்றும், சுதந்திரத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு குறித்து ஒரு அரசாங்க அமைச்சராக தீர்மானிக்க முடியாது என்றும், பிரித்தானிய பிரதி அமைச்சர் அன்ட்ரூ மிட்ச்செல் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, தொழிற்கட்சியின் சார்பில் விவாதத்தில் பங்கெடுத்த ஆசியாவுக்கான நிழல் அமைச்சர் கதரின் வெஸ்ட் ஆக்க பூர்வமான பல விடயங்களை சுட்டிக்காட்டி இருந்தார். அதில் முக்கியமானது, தொழில்கட்சி அரசாங்கம், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதாகும். மனித உரிமை மீறல்களில், துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் ஆதரிக்கின்றோம்.

இனப்படுகொலை என்பது நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய விடயம் என்றாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனப்படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். அதுவரை நாங்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை தொடர்ந்து முன்னெடுப்போம் என தெரிவித்த அவர் தமிழ் சமூகம் தங்களுக்கு எத்தகைய செயற்பாடுகள் பொருத்தமானது என கருதுகின்றதோ அந்த வகையில் அவர்களுடன் இணைந்து செயற்படுவோம் என்றும் உறுதி அளித்திருக்கிறார்.

இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை, தொழிற்கட்சி ஏற்றுக் கொள்கிறது. இலங்கையில் இடம்பெற்ற மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்




குற்றங்கள் தொடர்பான விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் உறுதியளித்திருக்கிறது. இது தற்போதைய கொன்சர்வேட்டிவ் அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற நழுவலான கொள்கையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக காணப்படுகிறது.

இந்த சூழலானது, பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தொழிற்கட்சிக்கு ஆதரவான அலையை உருவாக்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பிரித்தானியாவில் இரண்டரை இலட்சம் வரையிலான புலம்பெயர் தமிழர்கள் வசிக்கின்ற போதும் அவர்கள் பரந்து வாழ்வதால் அரசியல் ரீதியான செல்வாக்கை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் இப்போது நிலைமைகள் மாறுகின்ற அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த வாய்ப்பை பிடித்துக் கொண்டு புலம்பெயர் தமிழர்கள் பிரித்தானிய பாராளுமன்றத்துக்குள் நுழையும்போது கனடாவைப் போல செல்வாக்கு செலுத்துகின்ற சூழல் உருவாகலாம். அது பிரித்தானியாவில் உள்ள தமிழ் சமூகத்தை வலுப்படுத்துவதாக மாத்திரமன்றி, இலங்கையில் இடம்பெற்ற மீறல்களுக்கு சர்வதேச நீதியை பெற்றுக் கொடுப்பதற்கான காத்திரமான பங்களிப்பை வழங்கக் கூடிய சூழலையும் உருவாக்கக் கூடும்.

**– என்.கண்ணன் –**

# நாடகக்கலையினூடாக நல்லிணக்க சமுதாயமொன்றை கட்டியெழுப்ப முடியும்



## நாடகக்கலைஞர் கணேசபிள்ளை நிரோசன்

நாடகக்கலைஞரான கணேசபிள்ளை நிரோசன் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றை சேர்ந்தவர். இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண தேசிய பாடசாலையிலும் ஆம்ப பிரிவு உயர் கல்வியை கற்றவர். வீதி அபிவிருத்தி அதிகார சபையில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் இவர் சிறு வயது முதல் நாடகங்களில் நடிப்பதென்பதை பிடித்த விடயமாகக் கொண்டு ஆரம்ப பாடசாலை கல்வி கற்கும் காலங்களில் பாடசாலையில் நடித்து வந்த ஆர்வமே இவரை நாடகக்கலைஞராக அறிமுகமாக்கியது .

**கேள்வி - உங்களுடைய கலைத்துறை பிரவேசம் பற்றி கூற முடியுமா...?**

**பதில் -** கடந்த 14 வருடங்களுக்கு முன்னர் அக்கரைப்பற்றில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக 45 நாட்கள் நாடகத்துறை சம்மந்தமான பயிற்ச்சி பட்டறை ஒன்று இடம்பெற்றிருந்தது. ஆரம்ப காலம் முதல் நாடகத்துறையில் எனக்குள் இயல்பாகவே ஓர் ஆர்வம் இருந்து வந்தது. இதனடிப்படையில் 45 நாட்கள் நடைபெற்ற நாடகத்துறை பயிற்சி பட்டறையானது எனக்கொரு வாய்ப்பாக அமைந்திருந்தது. இதுவே எனது நாடகத்துறையின் பிரவேசத்துக்கு அடித்தளமாக காணப்பட்டது.

**கேள்வி - வீதி நாடகங்கள் தொடர்பாக தற்போது சமுதாயத்தின் பார்வை எவ்வாறு உள்ளது?**

**பதில் -** உண்மையில் தற்காலத்தில் வீதி நாடகமென்பது எமது சமூகத்தில் அருகி வரும் நிலையே காணப்படுகின்றது. இருந்த போதிலும் வீதி நாடகங்களை பொறுத்த வரையில் சமூகத்துக்கு உதவும் வகையில் விழிப்புணர்வான விடயங்களை மக்களுக்கு நேரடியாக நடித்துக்காட்டுவதன் ஊடாக சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் தற்போது இளைஞர்களிடையே பெரும் சவாலுக்குரிய விடயமாக காணப்படுகின்ற மதுபாவனை என்கின்ற விடயம் வெறுமனே பேசிப்பேசி மதுபாவனையின் விளைவுகளை வார்த்தைகளாக நாம் கூறும் போது அவர்கள் இலகுவாக கடந்து செல்வார்கள். ஆனால் உண்மையான சம்பவத்தினூடாக அதனை ஒரு நாடகமாக வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் சிறுமாற்றம் ஏற்படுவதை அவதானி க்க முடிகின்றது.

**கேள்வி - நாடகக்கலையினூடாக நல்லிணக்க சமுதாயமொன்றை கட்டியெழுப்ப முடியுமா?**

**பதில் -** நிச்சயமாக முடியும். எமது நாட்டை பொறுத்தவரையில் இது பல்வேறு இனங்கள் வாழும் நாடு. மூவினமும் ஒன்று பட்டால் சுபீட்சமான நாடாக எமது நாட்டை கட்டியெழுப்ப முடியும். அந்தவகையில் கடந்த காலங்களில் எங்களுடைய நாட்டில் நல்லிணக்கம் மலரவேண்டும் என்பதை நாங்கள் பல்வேறுபட்ட வீதி நாடகங்களினூடாக அண்மைக்காலங்களில் வெளிப்படுத்தியிருந்தோம். இந்த வீதி நாடகங்களினூடாக வெற்றியையும் எமக்கு தந்துள்ளது.

**கேள்வி - உங்களுடைய வீதி நாடகங்களில் பொதுவாக போதைப்பொருள் பாவனை, பெண்களுக்கெதிரான வன்முறைகள் சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பான விடயங்களே அதிகம் காணப்படுகின்றது. இதற்கான உந்துதல்கள் அல்லது சம்பவங்கள் ஏதும் உள்ளதா?**

**பதில் -** நிச்சயமாக உள்ளது எங்களது சமூகத்தை பொறுத்தவரையில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றது. அந்த வகையில் நீங்கள் கூறியது போல் போதைப்

> **உண்மையில் வீதி நாடக கலைஞன் என்ற வகையில் எங்கு சென்றாலும் சமுதாயத்தில் எமக்கு ஓர் மதிப்பும் அடையாளமும் தமிழ் பேசும் பிரதேசங்களில் உண்டு.**
> **எங்களைப் போன்ற கலைஞர்களின் ஊக்கத்துக்கு மீடியாக்கள் மற்றும் பத்திரிக்கைகளின் ஒத்துழைப்புகள் எங்களுக்கான மாற்றத்தை கொண்டுவரும் என நாங்கள் நம்புகின்றோம்.**



பொருள் பாவனை, பெண்களுக்கெதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் போன் பல்வேறுட்ட பிரச்சினைகள் எங்களது சமூகத்தின் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. அந்தவகையில் இவ்வாற பிரச்சினைகள் காணப்படும் இடங்களுக்கு நாங்கள் நேரடியாக சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டு அந்த கிராமங்களில் வீதி நாடகங்களை நடாத்துவதன் மூலம் அந்த மக்களுக்கு ஒரு தெளிவும் விழிப்புணர்வும் ஊட்டப்பட்டு எத்தனையோ பேர் மனம் திருந்திய சம்பவங்களும் உண்டு. அதுமட்டுமல்லாது சிறுவர்களுககெதிரான துஷ்பிரயோகங்கள் சம்மந்தமாகவும் சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட வீதிநாடகங்களை நாடாத்தி சமூகத்தில் பல்வேறு மாற்றங்களையும் கொண்டு வந்துள்ளோம்.

**கேள்வி - வீதி நாடகங்கள் ஊடாக சமுதாயம் உங்களை எவ்வாறு பார்க்கிறது?**

**பதில் -** உண்மையில் வீதி நாடக கலைஞன் என்ற வகையில் எங்கு சென்றாலும் சமுதாயத்தில் எமக்கு ஓர் மதிப்பும் அடையாளமும் தமிழ் பேசும் பிரதேசங்களில் உண்டு. எங்களைப் போன்ற கலைஞர்களின் ஊக்கத்துக்கு மீடி யாக்கள் மற்றும் பத்திரிக்கைகளின் ஒத்து ழைப்புகள் எங்களுக்கான மாற்றத்தை கொண்டுவரும் என நாங்கள் நம்புகின்றோம்.

**கேள்வி - கூத்துக்கலையின் இன்றைய நிலை தொடர்பாக உங்களின் பார்வை எவ்வாறு இருக்கிறது?**

**பதில் -** உண்மையை கூறின் இன்றைய காலகட்டத்தில் கூத்துக்கலையானது அழிந்து வரும் நிலையில்தான் உள்ளது. அந்தவகையில் எமது பிரதேசத்தில் ஒரு சிலர் மாத்திரமே கூத்துக்கலையை இடைவிடாது மேற்கொள்கின்றனர். ஆனால் பெரும்பாலும் பல அண்ணாவிமார்கள் தற்போது உயிரோடு இல்லை. அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் தற்கால இந்திய சினமா போல் பெரிய வளர்ச்சியை கண்டிருக்கும். அன்றைய காலங்களில் ஒரு ஆலய திருவிழாக்காலங்களில் நிச்சயமாக கூத்துக்கள் இடம்பெற்றே தீரும். காலைமுதல் இரவு வரை கூத்துக்கான ஒத்திகைகள் பார்கப்பட்டு இரவு முழுதும் கூத்துக்கள் இடைவிடாது அரங்கேற்றப்படும். ஆனால் இன்றைய காலத்தில் அழிந்துவரும் இக்கூத்து கலையினை மீண்டும் சமூகத்துக்குள் கொண்டுவர நினைக்கின்ற போதிலும் அதனைகற்றுக்கொள்கின்ற மாணவர்கள் எமது சமுதாயத்தில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றார்கள்.என்பதே நிதர்சனம்.

**கேள்வி - பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் ஆற்றுப்படுத்த எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.?**

**பதில் -** இன்று எமது சமூகத்தில் வளர்ந்து வருகின்ற இளைஞர்களிடையே சமூக வலைத்தள பாவனை அதிகமாக உள்ளதுடன் அவற்றுக்கு அடிமையான நிலையே காணப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாறான கலைகளை வளர்த்தெடுக்க வேண்டுமெனில் பாடசாலை மட்டத்தில் இருந்து நாடகம் சார்ந்து பயிற்ச்சி பட்டறைகள், செயலமர்வுகள் நாடகங்கள் சார்ந்து இடம்பெறுகின்றது. இவ் பயிற்சி பட்டறையின் மூலமாக எமது அழிந்து வரும் பாரம்பரி கலைகளை சுயமாகவே வளர்த்தெடுக்கும் சூழல் மாணவர்களிடையே அதிகரிக்குமானால் எமது பாரம்பரிய கலைகளை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும்.

**கேள்வி - மேடை நிகழ்ச்சிகளில் நாடகங்களுக்கு தற்காலத்தில் எவ்வாறான முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது?**

**பதில் -** தற்காலத்தில் எங்களது பிரதேசத்தை பொறுத்தவரையில் வரவேற்கத்தக்க ஒரு விடயமாக காணப்படுகின்றது. எந்த ஒரு நிகழ்வை எடுத்துக்கொண்டாலும் மேடை நாடகங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. ஆனால் குறைந்தளவில் மட்டுமே மேடை நாடகங்கள் மிகவும் அரிதாக அரங்கேற்றப்படுகின்றது. ஏனெனில் அதனை கற்றுக்கொள்ளும் மாணவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர். இதுவே எங்கள் சகோதர மொழி பேசக்கூடிய மாணவர்களை போட்டி நிகழ்ச்சிகளில் காணும் போது அதிகளவான நாடகங்கள் அரங்கேற்றப்படும். அரச விழாக்கள் மற்றும் இளைஞர் விழாக்களில் தமிழர் தரப்பிலிருந்து வரும் நாடகங்கள் அரிதாகவே காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அரச நாடக விழாக்களில் எமது பிரதேச மாணவர்களின் நாடகங்களை அரங்கேற்றுவதன் மூலம் எமது ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கான பெயரை நாடகத்துறையில் வளர்தெடுப்படுக்க வேண்டும் குறிப்பாக மேடை நாடகத்துறையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்கின்ற அவா எங்கள் மத்தியில் காணப்படுகின்றது.

**கேள்வி - தெரு நாடகங்களில் நீங்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன?**

**பதில் -** பல சவால்கள் காணப்படுகின்றது. குறிப்பாக விழிப்புணர்வு நாடகமொன்றை நாங்கள் அரங்கேற்ற முற்படுகின்ற போது சமூகத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாக தேவைப்படுகின்றது. ஆனால் இந்த விடயத்தில் பெரும் சவாலாக உள்ளது. ஆனாலும் அந்த சவால்களை வெற்றி கொண்டு அந்த நாடகத்தை அரங்கேற்ற முடியும். அதுமட்டுமல்லாது ஒரு நாடகத்தை எங்களது பிரதேசத்தில் செய்ய முற்படுகையில் ஆர்வமுள்ள மாணவர்கள் பலர் எங்கள் பிரதேசத்தில் காணப்படுகின்றார்கள். நடிப்பதற்கு ஆசையிருந்தும் அவர்கள் அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஏதோ ஒரு காரணத்தை கூறி தங்களுக்கு கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தை தட்டிக்கழிக்கிறார்கள். அது மட்டுமல்லாது எங்களது பிரதேசங்களில் வீதி நாடகங்களை அரங்கேற்றம் செய்யும்போது தனியார் நிறுவனங்களே எங்களை ஊக்குவிக்கின்றது. அதனையும் தாண்டி எங்களைப்போன்ற கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களது நிகழ்ச்சிகளில் எங்களுக்கான பங்களிப்பினையும் தருவார்களாயின் அது நிச்சயமாக எங்களை ஊக்குவிக்கும்.

**கேள்வி - நாடகத்துறை மட்டுமல்லாது இசைத்துறை மற்றும் ஏனைய துறைகளிலும் சிறந்த கலையார்வம் உள்ளவராக இருக்கிறீர்கள் இது பற்றி கூறுங்கள்..?**

**பதில் -** நாடகத்துறையில் அதிக ஆர்வம் எனக்குள்ளது. இந்த நாடகத்துறையில் எல்லாமே இருக்கிறது அதில் ஏற்பட்ட ஆர்வம் தான் என்னை இசைத்துறைக்குள் உள்ளீர்த்தது. அதில் ஒரு சந்தர்ப்பமாகத்தான் நாடகத்துறையிலும் இசைத்துறையிலுமாக அண்மையில் தென்னிந்தியாவிலிருந்து எங்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நாடகத்துறையில் ஏற்பட்ட ஆர்வம்தான் இசைத்துறையிலும் ஈடுபடுவதற்கான ஆர்வத்தை தூண்டி யது. பல்வேறுபட்ட நடனக்கலைஞர்களுடன் சேர்ந்து நடனமாடியுள்ளோம் அத்தோடு ஆல்பம் ஒன்றையும் வெளியிட்டுள்ளோம். இவ்வாறான முயற்ச்சிகள் வீதி நாடகத்தின் ஊடாகவும் மேடை நாடகத்தின் ஊடாகவுமே கிடைத்த அனுபவமும் ஆசைகளுமே எங்களது அடுத்தகட்ட நகர்வுக்கு கொண்டு சென் றது

**கேள்வி - நீங்கள் ஓர் கலைஞர் என்ற வகையில் இளைய சமுதாயத்திற்கு கூறவருவது என்ன.?**

**பதில் -** நிச்சயமாக எங்களது மாணவர்கள் திறமையாக கல்வி கற்றாலும் எங்களுடைய கலைகளை பேணி பாதுகாக்கும் தலையாய பொறுப்பு எங்களது இளைய சமுதாயத்தினரிடமே உள்ளது. எங்களது பாரம்பரிய கலைகளை அழியவிடாது பேணிபாதுகாக்க முன்வர வேண்டுமென்பதே எனது பணிவான கோரிக்கையாகும்.

செல்வி வினாயகமூர்த்தி



# வாய்ப்புக்களைத் தேடி நீங்கள் பயணியுங்கள்

## நிச்சயமாக உங்களுடைய திறமைக்கு ஏதோ ஒரு வகையில் வாய்ப்பு கிடைக்கும்

செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், நடிகை, பாடகி

## சரத்குமார் லக்சனா

சிறுவயதில் ஊடகத்துறையிலும் சரி சினிமா துறையிலும் சரி சாதிக்க வேண்டும் என்ற இலக்கோடு பயணிக்கும் ஒருவர் பற்றி தான் இன்றைய நேர்காணலில் நாம் பார்க்கப் போகின்றோம். தன்னுடைய 18 வது வயதிலேயே ஊடகப் பயணத்தில் அடி எடுத்து வைத்தவர் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியில் வசித்து வரும் சரத்குமார் லக்சனா. இவர் ஊடகத்துறையும் கடந்து தற்போது சினிமா துறையிலும் தடம் பதித்திருக்கின்றார்.

**வணக்கம் லக்சனா உங்களுடைய ஊடகப் பயணம் தொடர்பாகக் குறிப்பிடுங்கள்?**

எனக்கு 18 வயது இருக்கும் போது ஊடகத்துறைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. சிறு வயது முதலே நான் தொலைக்காட்சியில் வரவேண்டும் என்கின்ற ஆசை இருந்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கின்ற போதெல்லாம் இவ்வா



றான நிகழ்ச்சிகளை போல நானும் ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் ஏற்பட்டது. இத்தகைய தூண்டுதலே நான் ஊடகத் துறைக்குள் பிரவேசிக்க காரணமாய் அமைந்திருந்தது. அதனால் என்னுடைய 18 வயதில் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கின்ற கேப்பிட்டல் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது.

**வாழ்த்துக்கள் லக்சனா இவ்வளவு சிறுவயதில் உங்களுக்கான வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி. இருந்தாலும் இதனை எல்லாம் எப்படி சமாளித்து கொண்டீர்கள்?**

எனக்குள் இருக்கும் தன்னம்பிக்கை என்னை இன்னும் உயரத்துக்கு கொண்டு போய் சேர்த்தது என்று சொல்லலாம். ஆரம்பத்தில் சற்று பயத்துடன் தான் ஊடகத்துறைக்குள் பிரவேசித்தேன். எதுவுமே தெரியாத வயதில் எப்படி இந்த ஊடகத்துறைக்குள் நின்று நிலைப்பேன் என்று கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் என்னுடைய விடாமுயற்சி தன்னம்பிக்கை மட்டுமே என்னை இந்த அளவுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

**ஊடகப் பயணத்தில் உங்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறு அமைந்திருந்தது?**

ஆரம்பத்தில் நான் தொலைக்காட்சியினுடைய செய்தி வாசிப்பாளராக தான் பணியாற்றுவதற்கு முதலில் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பிற்பாடு சிறிது சிறிதாக என்னுடைய வளர்ச்சியினை கண்டு நிகழ்ச்சி தொகுப்பாளராக பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் அந்த தொலைக்காட்சி நிறுவனம் பெற்று தந்தது. பிரதான செய்திகளை நான் வாசிக்க தொடங்கினேன். அதற்குப் பின்னர் காலை நேர வணக்கம் கேப்பிட்டல் நிகழ்ச்சியினையும் தொகுத்து வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தது அத்துடன் ட்ரெண்டிங் என்கின்ற நிகழ்ச்சியும் தொகுத்து வழங்க வாய்ப்பு கிடைத்தது.

**உங்களுக்குள் இருக்கும் இசைத் திறமைகள் பற்றி குறிப்பிடுங்கள்?**

சிறு வயது முதல் இசைத்துறை மீது எனக்கு அதிக ஆர்வம் இருந்தது. நான் நன்றாக பாடல் பாடுவேன். பாடசாலை காலங்களில் அதிகமாக மேடைகளில் ஏறி பாடல் பாடிய

> **ஆரம்பத்தில் சற்று பயத்துடன் தான் ஊடகத்துறைக்குள் பிரவேசித்தேன். எதுவுமே தெரியாத வயதில் எப்படி இந்த ஊடகத்துறைக்குள் நின்று நிலைப்பேன் என்று கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது . ஆனாலும் என்னுடைய விடாமுயற்சி தன்னம்பிக்கை மட்டுமே என்னை இந்த அளவுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.**

நினைவுகளும் உண்டு. அதுமட்டுமல்ல கொரோனா காலத்தில் கூட கேப்பிட்டல் தொலைக்காட்சியில் கொரோனா பாடல் பாடுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது.



மேலும் தீபாவளி தின பாடலும் பாடியிருக்கிறேன். அதில் நடிப்பதற்கான வாய்ப்பும் எனக்கு கிடைத்தது.

**உங்களுக்கான சினிமாத்துறை வாய்ப்பு எப்படி கிடைத்தது?**

டிஆர்எம் பிக்சர்ஸ் தயாரித்த புங்குடுதீவே என்கின்ற பாடலில் நடிப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இந்த வாய்ப்பை எனக்கு பெற்று தந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பிரபல புகைப்பட கலைஞர்களாக விளங்கும் ஏ கே கமல் என்கின்ற புகைப்பட கலையகம் தான் இந்த வாய்ப்பை எனக்கு பெற்றுத் தந்தது. அத்துடன் அறிமுக நடிகையாக நான் இந்தப் பாடலில் நடித்திருப்பதும் மிக முக்கியமாக கூற வேண்டும். எனவே இது என்னுடைய வாழ்க்கையில் நடிப்பிற்கான ஒரு முதல் அத்தியாயமாகவே கருதப்படுகிறது.

**ஊடகத்துறை சார்ந்து இப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

இப்போது நான் யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கின்ற பிரபல தொலைக்காட்சி நிறுவனமான ஐ பி சி தமிழ் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். அத்துடன் பகுதி நேரமாக நான் வானவில் என்கின்ற நேர்காணல் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கின்றேன். மேலமாக ஃபுட் ரிவியூ என்கின்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறேன்.

**இத்தருணத்தில் நீங்கள் நன்றி கூற விரும்பும் நபர்கள்?**

முதலில் என்னுடைய குடும்பத்தினருக்கு நன்றி கூற வேண்டும். அவர்கள் தான் என்னுடைய ஒவ்வொரு நகர்விலும் பக்க பலமாக இருக்கிறார்கள். அத்துடன் என்னுடைய அன்பு கணவர் சரத்குமார் அவருக்கும் நன்றி சொல்ல வேண்டும். அவர் என்னுடைய வாழ்க்கையில் எல்லா விடயங்களுக்கும் உறுதுணையாக இருக்கிறார். என்னுடைய மாமியாரும் எனக்கு ஒரு தாய் போன்று சிறந்த வழிகாட்டியாக இருந்து வருகிறார். மேலும் என்னுடைய ஊடகத்துறை நண்பர்கள் எனக்கு நடிப்பதற்கான வாய்ப்புகளை அளித்த அனைவருக்கும் இந்த வேளை நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

**உங்களைப் போன்று ஊடகத்துறையிலும் சரி சினிமாத் துறையிலும் சரி சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு கூற விரும்புவது?**

எல்லோருக்கும் ஏதோ ஒரு கனவு இருந்து கொண்டு தான் இருக்கும். அந்த கனவு எந்த துறை சார்ந்திருந்தாலும் உங்களுடைய கனவுகளைத் தேடி பயணியுங்கள் என்று நான் கூற விரும்புகின்றேன். காரணம் நானும் அப்படித்தான் பல்வேறு இடங்களை கடந்து தான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றேன். அதுபோல நீங்களும் எந்த தடைகள் வந்தாலும் தடைகளை தகர்த்தெறிந்து உங்களுடைய பாதையில் பயணத்தை தொடர்ந்தால் வெற்றி மகுடம் சூட்டிக் கொள்ளலாம் என்பதுதான் என்னுடைய நம்பிக்கையும் மற்றும் என்னுடைய ஒரு அறிவுரையாகவும் இருக்கிறது. வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று கவலைப்படாமல் வாய்ப்புகளைத் தேடி நீங்கள் பயணியுங்கள் நிச்சயமாக உங்களுடைய திறமைக்கு ஏதோ ஒரு வகையில் வாய்ப்பு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**– ஸ்ரீதரன் தமிழினி –**



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# நாத இசை பேரொலி கலாநிதி
# கே.எம்.பஞ்சாபிகேசன்

**(நாத இசை பேரொலி கே.எம். பஞ்சாபிகேசன் அவர்களின் நூற்றாண்டு விழா ஜூலை முதலாம் திகதி நடாத்தப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.)**

ஏழு விரல்களினால் வாசிக்கப்படுவதால் "ஏழில்" என்றழைக்கப்பட்ட நாதஸ்வர கலையின் தனித்துவ ஆளுமையாக விளங்கியவரே கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசன்.

காற்றிசைக்கருவி வகையைச் சார்ந்த இந்த "நாதஸ்வரம்" மக்களின் அன்றாட வாழ்க்கையில் தினசரி இடம்பெறும் வகையில் மிகவும் சிறப்பாக ஈழத்தில் இசைக்கப்படுகின்றது.

தமிழர் கலாசாரத்தில் மிகவும் புகழ் பெற்ற இசைக் கருவியாக விளங்குவது இந்த நாதஸ்வர இசைக்கருவியாகும். தமிழ் மக்கள் பெருமையோடு சொந்தம் பாராட்டுகிற வாத்தியமான நாதஸ்வரம் திருவிழாக்களிலும், திருமண வைபவங்களிலும், திருக்கோயில் வழிபாடுகளிலும், இறைவனின் திருவீதி உலாக்களிலும், உறுமி மேளம், நையாண்டி மேளம் போன்ற கிராமிய இசை நிகழ்ச்சிகளிலும் மிகவும் சிறப்பாக இசைக்கப்படுகிறது.

### இராஜவாத்தியமான நாகஸ்வரம்:

இராஜவாத்தியம் என்றும், மங்களகரமான வாத்தியம் என்றும் சிறப்பிக்கப்பட்டு, தமிழர்கள் கொண்டாடும் விழாக்கள் யாவற்றிலும் நாதஸ்வர இசையை நாம் இனிதே கேட்கலாம்.

நாதஸ்வரம் துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக் கருவியாகும். இது நாதஸ்வரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம், நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுவது உண்டு.

ஈழத்து இசைப் பாரம்பரியத்தில் செழுமையாகத் தொடரும் பண்பாட்டின் அடையாளமாக நாதஸ்வரக்கலை விளங்குகின்றது. இந்தக் கலையின் தனித்துவ ஆளுமையாக விளங்கியவரே தென்மராட்சி மண் பெற்றெடுத்த கே.எம்.பஞ்சாபிகேசன்.

தெய்வீகமான இசையை இன்றளவும் பட்டி தொட்டி முதல் இசைவிழா வரையும் போற்றிக் காப்பவர்கள் நாதஸ்வரக் கலைஞர்களே.

இது திறந்த வெளியில் இசைப்பதற்கு மிகவும் ஏற்ற கருவி. அத்துடன் நெடுந்தூரம் வரையில் இதன் ஓசையைக் கேட்கலாம்.

### உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை முழங்கியவர்:

1974 உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை வழங்கிய சரித்திரப் பெருமை பெற்றவர் கே.எம்.பஞ்சாபிகேசன். பாரம்பரிய பேணுகை, கலை வாழ்வை, ஆன்மீகமாக கொண்ட பக்குவம் அவரது உயர் தனிப்பண்புக்களை தன்னகத்தே கொண்ட பெருமைக்குரியவர்.

பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்தான வித்துவானாக கௌரவம் பெற்றவர்.

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்த வாசிப்பு, சபை அறிந்த கச்சேரி ஒழுங்கு, சாஸ்திரிய இசை துணுக்கம், எல்லையில்லாத மனோதர்மம் அவரது இசையின் தனித்துவங்கள் ஆகும்.

கோயில்களில் நாகஸ்வர இசையோடுதான் இறைவனின் நித்திய காலப் பூசைகள் நடைபெறும். ஒவ்வொரு காலப் பூசைகளிலும் என்ன என்ன ராகங்கள் வாசிக்கப்பட வேண்டும் என்பது தொன்றுதொட்டு மரபாகவும் பூசை விதிமுறைகளுக்கு அமையவும் அமைக்கப்பட்டுள்ளது.

புலருமுன் நான்கு மணி தொடங்கி பூபாளம், பௌனி, மலைய மாருதம் வாசிக்கப்படும். உச்சி வேளை எனில் முகாரியும் பூரண சந்திரிகாவும் மாலை ஆறு மணிக்கு மேல் சங்கராபரணமும் பைரவியும் இசைக்கப்படும். அதே போல விழாக் காலத்தில் இறைவன் உலா வரும் இடத்திற்கு ஏற்பவும் ராகங்கள் வாசிக்கப்படுகின்றன.

**1974 உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை வழங்கிய சரித்திரப் பெருமை பெற்றவர். வாழ்வின் முதுமையிலும் கம்பீரம் குறையாமல் இறுதிவரை நாதஸ்வர மேதையான கே.எம். பஞ்சாபிகேசன் 26.06.2015 அன்று தன் மூச்சாகிய ஏழு ஸ்வரங்களுக்குள் மூழ்கிப்போனார்**

### தமிழகத்தில் இசை பயிற்சி:

உலகளாவிய ரீதியில் புகழடைந்த பஞ்சாபிகேசன் அவர்கள் 01.07.1924 ஆம் ஆண்டு தென்மராட்சியில் பிறந்தவர். தனது இசையாற்றலை வளர்த்துக் கொள்வதற்காக தமிழகம் சென்று நாதஸ்வர இசை மாமேதைகளான திருவாவடுதுறை ராஜரட்ணம் பிள்ளை "கக்காயி" நடராஜசுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் இசை பயின்றார்.

பின்னர் ஐயம்பேட்டை வேணுகோபால் பிள்ளையிடம் பயிற்சி பெற்று பாரம்பரிய மரபு வழிக்கச்சேரி செய்யும் முறைமையினை நன்கு பயின்று கொண்டார்.

ஈழமண் தந்த நாதஸ்வர, தவில் இசைக் கலைஞர்கள் தங்களது பெயர்களை இசையுலகில் மிக ஆழமாகவே பதித்துள்ளார்கள். கலைகளின் தாயகம் என நினைக்கின்ற தமிழகக் கலைஞர்கள் வியந்து நிற்கும் அளவு எங்கள் தேச இசைவேளாளர்களின் மரபும் வளர்ச்சியும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவிற்கு வியாபித்து இருக்கிறது.

### 14வது வயதில் முதல் நாதஸ்வரக் கச்சேரி:

தனது 14வது வயதில் முதல் நாதஸ்வரக் கச்சேரியை நிகழ்த்திய இவர் அன்று தொட்டு படிப்படியாகப் பெரும் புகழ்கொண்டார். தமிழகத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்களான திருவாரூர் இலட்சியப்பா திருநெல்வேலி பிச்சையப்பா கம்பர், மாசிலாமணி போன்றோரோடும் நம் நாட்டின் பிரபல கலைஞர் களான நல்லூர்சிவாசாமி, அளவெட்டி பத்மநாதன் போன்றோரோடும் இணைந்து பல கச்சேரிகளை இவர் வாசித்துள்ளார்.

உலகப்புகழ்பெற்ற தவில்மேதை தட்சிணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து இவர் செய்த கச்சேரிகள் மறக்க முடியாதவை.

### இசைப்பேரறிஞர் விருது:

எம் மண்ணின் அரும் பெரும் சொத்தான நாதஸ்வர, தவில் இசைக்கலைஞர்களான மறைந்த கலைஞர்களான தவில்மாமேதை வி.தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் வரிசையில் சாவகச்சேரி தந்த எம்.பஞ்சாபிகேசன் அவர்களும் முக்கிய இடம் பெறுகிறார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் "இசைப் பேரறிஞர்" விருதினையும், கலாசார அமைச்சின் "கலாபூஷணம்" விருதினையும், யாழ். இந்து கலாசார சபையின் "சிவகலா பூஷணம்" விருதினையும் பெற்றவராவார். 1998 இல் வடகிழக்கு மாகாண சபையினால் இவருக்கு ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்ததும் அறிந்ததே.

திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தினால் "இசைவள்ளல் நாதஸ்வரகலாமணி" எனும் பட்டமும், கல்வி அமைச்சினால் "நாதஸ்வர கானவாரிதி" எனும் பட்டமும், இந்து கலாசார அமைச்சினால் "ஸ்வரஞானதிலகம்" எனும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டன.

மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் இவரது இசைக் கச்சேரிகள் பல நிகழ்ந்துள்ளன.

### யாழ் பல்கலைக்கழக கலாநிதிப் பட்டம்:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2010ம் ஆண்டு ஒக்ரோபர் 6ம் திகதி "கௌரவ கலாநிதி" பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தது. அப்போது அவர் வாழும் போதே ஒரு கலைஞன் கௌரவிக்கப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதுமே அவன் கலைக்கு ஆற்றிய சேவையை உணர்ந்து கொள்ளப் போதுமானது.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக அமைந்தது, இவரது வித்துவத்திறமையையும் தனியொழுக்க மாண்பையும் கருத்தில் கொண்டு கௌரவ கலாநிதிப் பட்டம் கிடைத்தமைக்காக இசைக் கலைஞர்கள் சேர்ந்து நடாத்திய ஒரு கௌரவிப்பு விழாவில் பஞ்சாபிகேசன் அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோவிலில் இருந்து ஊர்வலமாக இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்து வரப்பட்டார்.

இணுவில் கலாமண்டபத்தில் பெரும் விழா நடந்தது. கல்விமான்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள் என அனைவரும் ஒன்று கூடி வாழ்த்தி மகிழ்ந்தனர். இது ஒரு கலைஞன் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கொள்ளலாம். வாழும் போதே கௌரவிக்கப்பட்ட ஒரே ஒரு நாதஸ்வரக் கலைஞர் அவராவார்.

### தென்மராட்சி பெருவிழா:

சாவகச்சேரியூர் பெற்ற இசைப்பேரறிஞர் திரு. பஞ்சாபிகேசன் போற்றுதலுக்கு உரிய ஒப்பற்ற கலைஞன் ஆவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமைக்கு தென்மராட்சியில் நடைபெற்ற பாராட்டுவிழா பெருமெடுப்பில் நிகழ்ந்தது.



2011 பெப்ருவரி மாதம் 27ம் திகதி சாவகச்சேரி மண் பஞ்சாபிகேசனுக்கு பெருவிழா எடுத்து கௌரவித்தது. சாவகச்சேரி சிவன் கோவில் கலாசார மண்டபத்தில் தென்மராட்சி கல்விமான்கள், கலைஞர்கள், வணிகர்கள், கலாரசிகர்கள் என அனைவரும் திரண்டிருந்து வாழ்த்தினர். நாத இசைக்காக தன்னை அர்ப்பணித்த ஏந்தலை உள்ளத்தில் ஏற்றி வைத்து வணங்கி மகிழ்ந்தார்கள். பெரும் திரளாகத் திரண்டு தங்கள் பிதாமகரை வாழ்த்தியும் வணங்கியும் மகிழ்ந்தனர்.

வாழ்வின் முதுமையிலும் கம்பீரம் குறையாமல் இறுதிவரை நாதஸ்வர மேதையாக விளங்கிய இசைப் பேரறிஞர் சாவகச்சேரியூர் கே.எம்.பஞ்சாபிகேசன் 26.06.2015 அன்று தன் மூச்சாகிய ஏழு ஸ்வரங்களுக்குள் மூழ்கிப்போனார்.

# கஜேந்திரகுமாருக்கு மருத்துவ சிகிச்சைக்காக விடுமுறை!



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை வரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பாரா ளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடு முறை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பிரதான நடவடிக்கைகள் அனைத்தும் முடி ந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரி யெல்லவி னால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற் கான விடுமுறை முன்மொழியப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை வரும் யாழ். மாவட்ட எம்.பியுமான கஜேந் திரகுமார் பொன்னம்பலத்திற்கு நேற்றிலிரு ந்து 3 மாத காலங்களுக்கு விடுமுறையளிக்குமாறு வேண்டுகின்றேன் என லக்ஷ்மன் கிரியெல்லவினால் விடுமுறை முன்மொழி யப்பட்டது. இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதனையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவரும் யாழ்மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பாராளுமன்றத்தி னால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்க சபை இணக்கம் வெளியிட்டது.

# ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும்

## குரல்கொடுத்த பெருந்தலைவர் சம்பந்தன்



சிங்கள சமூகம் தமிழ் மக்கள் மீது நம் பிக்கை கொள்ள வேண்டும் என்ற காரணத் தின் அடிப்படையில் ஐக்கியப்பட்ட பிரிக்கப்பட முடியாத பிரிபடாத நாட்டுக்குள் தமிழ் மக்க ளுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர். இதற்காக பாராளுமன்றத்திலும் சர்வதேச அரங்குகளிலும் சிங்கள அரசியல்வாதிகளு டனும் கலந்துரையாடி குரல்கொடுத்து வந்த வர்.

தந்தை செல்வா, அ.அமிர்தலிங்கம் ஆகி யோரின் வழியில் தமிழரசுக்கட்சியின் தலை வராகப் பணிபுரிந்தது மாத்திரமல்லாமல் இலங்கைத் தீவில் ஜனநாயகத்தைப் பாதுகா க்கவும், மனித உரிமைகளைப் பாதுகா க்கவும் குரல்கொடுத்த பெருந்தலைவர்களில் சம்பந்தனும் ஒருவர்.

சம்பந்தன் தொடர்பாக பல்வேறுபட்ட விமர்ச னங்கள் பல்வேறு தரப்புகளால் முன்வைக் கப்பட்டாலும் அவர் தனது வரம்புக்குள் இரு ந்து தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்காகப் போராடியவர் என்பதை யாரும் மறுக்க முடியாது என்று தெரிவித்து ள்ளார்.

# சம்பந்தனின் மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவு



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது இரங்கல் செய்தியில், அரை நூற்றா ண்டுக்கும் மேலாக இலங்கைக்கு சேவையா ற்றிய சம்பந்தனின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரி மைகளை வழங்குவதற்கான அவரது அர்ப்ப ணிப்பு நம்பிக்கையின் கலங்கரை விளக்கா கும். அவருடைய நேர்மையான மற்றும் நியாயமான தலைமை எனக்கும் மற்றவர் களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். உண் மையில், இது ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

# இரா.சம்பந்தன் "பல்லின,பன்மொழி,பன்மத" இலங்கையன்.

## தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இரா.சம்பந்தன் "பல்லினபன் மொழிபன்மத" இலங்கையன். பன்மைத்து வம் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழ் வோம் என்று உலகறியச் சொன்னவர்.

அறிவு, ஆன்மா, உடல் என்ற மனித கூறு களில், உடலால் மட்டுமே பலவீனமாகி இறு திக் காலத்தில் இருந்தார். அறிவும், ஆன் மாவும் பலம் இழக்கவே இல்லை. நான் அவரது கட்சி அங்கத்தவன் இல்லை. ஆனால். இந்த "சிங்க கொடி முதல் வழி காட் டல் குழு" சம்பவங்கள் வரை எல்லாவற்றை யும் அவருக்கு மிக பக்கத்தில் இருந்து நேர டியாக பார்த்தவன் நான்.

அவரை மதித்து, அவரைப் பயன்படுத்தி. பிரி படாத இலங்கைக்குள் தீர்வு தேடத் தவறிய அனைத்து சிங்கள - பௌத்த தேசியக் கட்சி களின் தலைவர்களும் இப்போது வரிசை யாக வந்து, "இரா. சம்பந்தனுடன் எனக்கு முப்பது வருட பழக்கம், நாற்பது வருட பழக் கம், ஐம்பது வருட பழக்கம் என்று அளப்பார் கள். அதையும் உங்கள் சாகாத ஆன்மா எங்கோ இருந்தபடி கேட்கப்போகிறது. பிரி வோம் சந்திப்போம் என்று தெரிவித்துள் ளார்.

### மஹிந்த ராஜபக்ச இரங்கல்!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச விடு த்துள்ள இரங்கல் செய்தியில், அவர் எனது நீண்டகால நண்பர். நாங்கள் கடந்த பல கால ங்களாக பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

சம்பந்தனின் மறைவு இலங்கை அரசியல் சகோதரத்துவத்துக்கும் மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஒரு பெரும் இழப்பாகும் என்று தெரிவித்துள் ளார்.

### க.ச.குகதாசன் இரங்கல்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்த ரான க.ச.குகதாசன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும், அரை நூற்றாண் டாகத் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பட்டவரும், இலங்கைத் தமிழர் இனச்சிக்கலுக்குத் தீர்வு காண அயராது உழைத்து வந்தவருமான சம்பந்தன் இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின றோம் என்று தெரிவித்துள்ளார்.



### சம்பந்தனின் இழப்பு தமிழ் மக்களின் பேரிழப்பு

#### சிவஞானம் சிறீதரன் இரங்கல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சம்பந்தனின் இழப்பு தமிழ் மக்களைப் பொறுத்த வரை காலத்தின் பேரிழப்பாகும்.

அவரின் எண்ணங்களையும் சிந்தனை களையும் கருத்தில் கொண்டு அவர் விட்டுச் சென்ற பயணத்தில் நாங்கள் ஒற்றுமையாக இணைந்து தமிழ்த் தேசியத்தை வென்றெ டுப்போம். தமிழ்த்தேசிய இனத்தின் அடிப் படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான நீண்ட பயணத்தில் எங்களுடைய கரங் களை ஒன்றாக இணைத்துப் பயணிப்பதே நாங்கள் அவருக்குச் செய்யும் பணியாக மாறும் என்றுள்ளது.

### இ.அங்கஜன் இரங்கல்!

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தமிழ்த் தேசியப் பரப்பின் மூத்த அரசியல், சட்ட ஆளுமை தமிழ்த் தேசத்திலிருந்து தன்னை நிரந்தரமாக விடுவித்துக் கொண் டது. அவரின் மறைவு தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

### காதர் மஸ்தான் இரங்கல்!

இரா.சம்பந்தன் நீண்ட நெடிய அரசியல் பார ம்பரியத்தைக் கொண்ட அவர் இலங்கைத் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர்க ளில் ஒருவராக விளங்கினார் . அவரது இழப் பானது இலங்கை அரசியலில் மாபெரும் இடை வெளியை தோற்றுவித்துள்ளது.

பல்வேறுபட்ட சோதனையான காலங்களி லும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக உறுதுணையாக நின்றார். தனது வாழ் நாளில் அரிய சேவைகள் பல செய்த அவர் இலங்கை அரசியல் வரலாற்றில் தனக்கென பொன்னான வரலாறொன்றை ஆழப்பதி த்துச் சென்றுள்ளார் என்றும் குறிப்பிட்டுள் ளார்.

# சரிவைச் சந்திக்கின்றாரா பிரதமர் ட்ரூடோ!



உலக அரசியல் தலைவர்களில் தனியான இடத்தைப் பிடித்தவர் கனேடியப் பிரதமர் ஜஸ் ரின் ட்ரூடோ. ஈழத் தமிழர்களுக்கு எதிராக உலகின் பல நாடுகளும் குரல் கொடுக்கின்ற போதிலும், இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான், போர்க்குற்றம்தான் என்பதை முதன்முதல் துணிந்து அறிவித்த வர் ட்ரூடோவே. வெறும் வாய்வார்த்தையு டன் நின்றுவிடாமல், "இலங்கையில் இடம் பெற்றது இனப்படுகொலையே" என்பதை கனேடிய பாராளுமன்றத்தில் தீர்மானமாக வும் அவர் நிறைவேற்றியிருக்கின்றார்.


இறுதிப்போரை முன்னெடுத்த போரக்குற்றங் களில் ஈடுபட்டவர்களுக்கு அவர் தடைகளை யும் விதித்திருக்கின்றார். ஆனால், கனேடிய அரசியலின் அண்மைக்காலப் போக்கு ட்ரூடோவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக் கும் விதமாகவே சென்றுகொண்டிருக்கின் றது என்பதை மறுப்பதற்கில்லை.

கனடாவில் தற்போது மதிப்பிழக்கும் அரசி யல்வாதியாக ட்ரூடோ மாறிக் கொண்டிருக் கின்றார் என்பதை அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட ஐந்துக்கும் மேற்பட்ட கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. இஸ்ரேல் - ஹமாஸ் போரில் மேற் கொள் ளும் நகர்வுகள், ரஷ்யாவைப்பகைப்பது, பணவீக்கம், கனடாவுக்குள் அதிகரித்து வரும் ஆயுதக் கலாசாரம் என எந்தப் பக்கம் பார்த்தாலும் ட்ரூடோவை நோக்கித் தான் கனேடியர்களின் விரல்கள் நீள்கின்றன. குறி ப்பாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட றொறன்ரோ வின் சென். போல்ஸ் தொகுதியில் நடை பெற்ற இடைத்தேர்தலில் ட்ரூடோவின் லிப ரல் கட்சி எதிர்க்கட்சியான கென்சர்வேடிவ் கட்சியிடம் மண் கௌவியிருக்கின்றது.

32 ஆண்டுகளாக சென். போல்ஸ் தொகு தியை இழக்காமல் இருந்த ட்ரூடோ தரப்பு க்கு இந்தத் தேர்தல் முடிவு துர்க்கனவே, அதிலும் சென். போல்ஸ் இடைத்தேர்தல் முடிவுகள் கனேடியர்களின் தற்போதைய மனநிலையை வெளிப்படுத்தும் என்று தேர் தலுக்கு முன்னதாக ட்ரூடோவே தெரிவித் திருந்த நிலையில், அவருக்குக் கிட்டிய தோல்வி "ஓர் ஒப்புதல் வாக்குமூலமாகவே பார்க்கப்படுகின்றது.

பிரதமர் ட்ரூடோ எங்கெல்லாம் வீழ்ச்சிய டைந்தாரோ, எங்கெல்லாம் தன் ஆதரவை இழந்துகொண்டிருக்கின்றாரோ அங் கெல்லாம் தன் தீர்மானங்கள் மற்றும் திட்ட ங்கள் மூலம் மக்களைக் கவர்ந்துள்ளார் கனேடிய எதிர்க்கட்சித் தலைவரும் கென்சர் வேடிவ் கட்சியின் தலைவருமான பியர் பொலிவர். ஆனால், பொலிவரின் எழுச்சி யால் ஈழத் தமிழர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், ஈழத்தமிழர்க ளின் விவகாரத்தில் ட்ரூடோ கொண்டுள்ள அதே சிந்தனையைத்தான் பொலிவரும் கொண்டிருக்கின்றார். ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக. அவர்களுக்கு இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதிகேட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை எனது ஆட்சிக் காலத்தில் கனடா நாடும்" என்ற அறிவிப்பு பொலிவருடையது. இருப்பினும், ஈழத்தமி ழர்களுக்கு வேண்டப்பட்ட, ஈழத்தமிழர்க ளால் அவதானிக்கப்படவேண்டிய அரசியல் நகர்வுகள் தற்போது கனடாவில் இடம்பெற் றுக் கொண்டிருக்கின்றன.

எவர் ஆட்சியமைத்தாலும் எமக்கான குரல் கள் ஒருபோதும் வலுவிழந்துவிடக்கூடாது என்பதுதான் ஈழத்தமிழர்களின் தற் போதைய எதிர்பார்ப்பு.




அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | |
|---|---|
| சுன்னாகம் | 021 224 2022 |
| நெல்லியடி | 021 226 0700 |
| பருத்தித்துறை | 021 226 1100 |
| ஆவரங்கால் | 021 222 6688 |
| சித்தங்கேணி | 021 225 2500 |
| சாவகச்சேரி | 021 227 0700 |
| பூநகரி | 021 320 1818 |
| முழங்காவில் | 021 300 6544 |
| விஸ்வமடு | 021 320 1515 |
| மன்னார் | 023 225 1656 |
| கிளிநொச்சி | 021 228 5505 |
| வவுனியா | 024 222 7777 |








இப்பத்திரிகை 05.07.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது.